
ஆனந்தத் தேன்
KABEER PRESS
க. சச்சிதானந்தன்

# ஆனந்தத்தேன்

348

பண்டித. க. சச்சிதானந்தன், B.A. (Hons.) Lond.

*Copyright reserved*] 1954 [விலை ரூபா ஒன்று

முதற் பதிப்பு—ஜன. 1954

Kabeer Printing Works, Madras (2432)

உலகியல்விளக்க ஆசிரியரும்,
திருவாசக விரிவுரை ஆசிரியரும், பெரும்புலவரும் ஆகிய
மாவைக் கவுணியன், பண்டிதமணி

## பிரமஸ்ரீ. க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார்

அளித்த

# முன்னுரை.

புலவோருக்கு உலகம் முழுமையும் ஒரு குடும்பமாகத் தோன்றும். ஏனையோர் காணாத பல உண்மைகளையும் அழகுகளையும் காண்பர்; உலக முழுமையும் அன்னார் கவிக் கண்ணுக்குத் தோன்றும் இயல்பும் வேறாகும். அத் தகைய விழுமிய செஞ்சொற் புலவோருக்கு உணர்ச்சியும் ஓசையும் உள்ளத்தெழுந்து பாட்டாக வெளிவரும். இங் ஙனம் எழுந்தவை நால்வகைப் பாவும், திணையும் துறையு மாகப் பரந்து விரியும். பரந்து பட்டுச் செல்லும் பாத் தொகுதியின் இயல்பின் போக்கினைப் பகுத்துரைப்பதே தொல்காப்பியச் செய்யுளியலாகும். பிற்காலத்துள்ள யாப் பருங்கலக் காரிகை முதலியன செய்யுளியலோடு பெரிதும் ஒற்றுமைப் பட்டனவேனும், உயிர்நிலைகளில் அங்கங்கே சில மாறுபாடுகள் உடையன. பாவின் இயல்பினை மாறுபட உணர்ந்து, இங்ஙனம் ஒரு கட்டுப்பாடு செய்துகொள்வதே பாட்டு என்று மயங்கும் கல்லாதவர்களே பாவினுக்குத் தன் னிச்சை வேண்டுமென்று கூக்குரலிடுகின்றனர்.

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலினம் அகவும் நாடன்"

என்னும் செய்யுள் செந்தொடையாய வாறென்றே சான் றோர் செய்யுள் மரபினை நன்கு தெளிவாக்கும்.

சொல்லாக்கமும் புணர்ச்சியும், சொற்பொருளும், தத்தம் உள்ளத்தெழுந்தவாறே கொள்வதும் புதுமை யென்று பலர் திரித்துணர்கின்றனர். வடமொழியில் விபீஷணன், இலட்சுமணன், என்ற சொற்களைத் தமிழிற் பிரயோகிக்கப் புகுந்த கம்பர் எஃகு செவியும் நுண்ணறிவும் உடையராய்த் தமிழோசையிலும் பாவிலும் அமிழ்ந்தித் தோய்ந்தவராதலின் விபீடணன் இலக்குமணன் என்று சொல்வதிற்கூடத் தமிழோசை காணுராய், வீடணன் இலக்குவன் என்று கனிந்த தமிழாகவே செப்பனிட்டமையை உய்த்துணரவேண்டும்.

வடமொழியைப் போலாது தமிழில் ஒவ்வொரு புணர்ச்சிக்கும் பொருள் உண்டு. இயல்பு தோன்றல், திரிதல், கெடுதல் என்பன மிக வியப்புறத்தக்க வெவ்வேறு பொருள்களைக் கொடுக்கும். பல சொற் பெய்து விளக்கவேண்டிய எண்ணங்களையெல்லாம் இருசொற்களைப் புணர்த்து மாற்றுல் மிக அழகாக வெளியிடக்கூடியதாய் அமைந்தது நந்தெய்வத் தமிழ்மொழியே. நம் உயிரிலும், இரத்தத்திலும், என்பிலும், தசையிலும் ஊறிக்கிடப்பதும், இன்னதென நிரூபிக்க முடியாததும், அகக்கண்ணுல் மாத்திரம் காணக்கூடியதுமான ஒரு தமிழ் மரபை உணர்கிருேம். பன்னூற்ருண்டுகளாய் வளர்ந்த நம் தமிழ்ப்பாவின் வளர்ச்சியிற் காலந்தோறும் புதுமை தோன்ருமலில்லை. அப்புதுமைகளெல்லாம், தமிழ்மரபோடொன்றிச் செல்கின்றன. சுருங்கக்கூறின், புதுமை தோன்றுங்காலெல்லாம், வேற்றுமையில் ஒரு ஒற்றுமையையும், ஒற்றுமையில் ஒரு வேற்றுமையையும் காண்கிருேம்.

முன்னைப் பழையோருடைய மரபை ஒட்டாது ஒவ்வொருவரும் தன்னிச்சைகொண்டு மனம்போனவாறே செய்யுள் செய்யின், அவரவர்க்கு மாத்திரம் அவையவை ஏதேனும் பொருள் கொடுக்குமே யன்றித் தமிழர்க்குப் புலப்படாவாம். மரபிற் சிதைந்த தமிழ் ஓசை கெட்டு, உணர்ச்சி கெட்டுப் பொருள் கெட்டுப் பயனிலதாகும்.

இத்தகைய புதுமையைப் 'பித்துப் புதுமை' (mad novelty) என்று கூறலே சாலும். இப்படியெல்லாம் பித்துப் புதுமை உண்டாவது தமிழ் மரபும் மொழி மரபும் அறியாமையாலும் அம்மொழியில் நன்கு தோயாமையாலு மேயே. ஆகவே, மரபையே மூலமாகக் கொண்டு எத்துணே வகைப்படுத்தினும் உடன்பாடாவதன்றிப் பழைய மரபை அடியோடு ஒழித்து விட்டுத் தத்தம் மனத்திற் கேற்பப் புதுமை கொள்வது கவி உலகிற் கலக்கத்தையே விளே விக்கும். இதையறியாது வாய்ப்பறை சாற்றி, இது மரபு என்று சொல்லும் விமரிசகர்களே என்னென்போம். புன்மையும், அறநெறியல்லனவும், நிறைந்த பேசும் படங் களேக் காணவிழைவோர் பலராயினும் அவை சான்ருேராற் கைக்கொள்ளப் படா. அஃதேபோல் மரபுகெட்ட பித்துப் புதுமைப் பாக்களே விளம்பரங்களாலும், கண்கவர் சித்திரங் களாலும், பாமர மக்கள் மனத்திற் புகுத்த, அவற்றை மொழி யறியார் பலர் நச்சினும் அவை சான்ருேராற் கவி யெனப் படாவாம்.

என்னருமை மாணவன் தான்யாத்த பாக்களே அவ்வப் போது எனக்குப் படித்துக் காண்பித்தார். பித்துப் புதுமைக் கவிகளாற் புண்ணுன என்நெஞ்சிற்கு அவை பெரு மருந்தாயின. தழும்பு கூடக் காணுதவாறு என்மனப் புண்ணே ஆற்றின. நானே அவற்றை வெளியிட வேண்டு மென்று ஆசை கொண்டேன். காலத்திற் கேற்றவாறு புதுவழியிற் றமிழ்மரபு சிதையாது இன்சுவை சொட்டப் பாடும் அவர் போக்கும், கவியமைவும் இத்துறைச் செல் வோர்க்கு ஒரு வழிகாட்டியாயிருக்கு மென்று எண்ணு கிறேன். இன்னேசையும், செஞ்சொல்லும் பொருளும் தாமே அமைந்து இவர்கவிகள் வெளிப்பட்டுள்ளன.

ஓசையும் பொருளும், சொல்லும் ஒன்ருகவே இவர் உள்ளத்திருந்து பாட்டாகக் கிளேத்தெழுகின்றது என்ப தற்குப் பாடல்கள் எல்லாவற்றிலும் சான்றுகள் உள்ளன. "தமிழ்த் தாயின் கண்ணீர்", "உயிர் கூவும் அங்கே"

என்பன யாப்பு முறையிலே ஒரு புதுமையேனும், அவை தமிழ் மரபோடொன்றி நிற்கின்றன. 'கடலும் புயலும்' 'யாழின் தந்திகள்' 'மணவாளன் வந்த கோலம்' 'மார்கழி மாதத்து மாலேவேளேயில் எழுதப்பட்டது' என்னும் செய்யுட்கள் ஓசையும், பொருளும் ஒன்ருேடொன்றிணைந்து ஆராத இன்பத்தேன் ஊட்டுவனவாய் இருக்கின்றன. 'யாழின் தந்திகள்' என்னும் தொகுதியிலே, உணர்ச்சிக் கேற்றவாறு அடிக்கடி வெகு நுண்ணிதாக ஓசையை மாற்றியமைக்கும் திறமை பாராட்டுக்குரியதே. இனிமையும் உள்ளத்தை ஈர்க்குந் தன்மையும், சுவையும் நிறைந்த கவிகளாலாய 'பெண்மையின் வெற்றி' என்னுந் தொகுதி, கவியிஞற் சிறுகதை கட்டுவோருக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். "மனிதனின் பெருமையும் பிராணிகளின் பதிலும் என்னுஞ் செய்யுள், சிறுவர்களுக்கு ஏற்ற நடையில் எழுதப்படினும் போர்க்கனலே மூட்டி உலகினே எரிக்கும் பெரியோர் பலருக்கு உபதேச மொழிகளும் அதில் உண்டு.

சுருங்கக் கூறின், தொன்மையின் தேர்ச்சியும், புதுமையும், மரபிற் பிறழாமையும், இனிமையும், ஒருங்கே கூடிய கவிநடை இயல்பாகவே என் இனிய மாணவன் உள்ளத்தில் எழுகின்றது. இந்நடை இத்துறைப் புகுவோர்க்கு ஒரு எடுத்துக் காட்டாக அமையும் என்று எண்ணுகிறேன். என்பாற் பல்லாண்டுகளாகத் தமிழ்கற்று நேயமொடு பழகி மாரு அன்பு பூண்ட என்னருமை மாணவன், பல்லாண்டு வாழ்ந்து மேலும் மேலும் தமிழ்ப் பணியில், ஈடுபட வேண்டுமென்ருசீர்வதிக்கிறேன்.

மாவிட்டபுரம்
தெல்லிப்பளே
20-8-53

க. சு. நவநீதகிருஷ்ண பாரதி.

# மலர்கள்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | விநாயகர் துதி ... | 1 |
| 2. | கலைவாணி துதி ... | 2 |
| 3. | புத்த தரிசனம் ... | 3 |
| 4. | தமிழ்க் கவிப்பித்து ... | 5 |
| 5. | தயங்காதே மனமே ... | 7 |
| 6. | காதற் பூக்கள் ... | 8 |
| 7. | பெண்மையின் வெற்றி ... | 11 |
| 8. | யாழின் தந்திகள் ... | 38 |
| 9. | விளையாடும் கடல் ... | 47 |
| 10. | உயிர் கூவும் அங்கே ... | 48 |
| 11. | சாந்தி ஏற்படுமா? ... | 49 |
| 12. | தாயும் குஞ்சும் குண்டுக்குப் பலி ... | 50 |
| 13. | மாரியே வா! வா! ... | 51 |
| 14. | தாயின் கண்ணீர் ... | 52 |
| 15. | வாழ்வாம் மலையில் ஏறும் வீரன் ... | 55 |
| 16. | எழுந்திடுவாய் மனமே! ... | 56 |
| 17. | பாட்டே எனை மறந்தாயோ! ... | 58 |
| 18. | கடலும் புயலும் ... | 60 |
| 19. | வைகறையின் சாந்தி ... | 61 |
| 20. | நுவர வீவாக் குளக்கட்டில் நின்றபோது ... | 62 |
| 21. | மார்கழி மாதத்து மாலை வேளையில் எழுதப் பட்டது ... | 65 |
| 22. | மணவாளன் வந்த கோலம் ... | 67 |
| 23. | மனிதனின் பெருமையும் பிராணிகளின் பதிலும் ... | 69 |
| 24. | கடவுளின் பதில் ... | 71 |

சென்னை திருவல்லிக்கேணி, கபீர் அச்சகத்தாருக்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

மாவை
23–1–54

க. சச்சிதானந்தன்.

உ

சிவமயம்

# ஆனந்தத்தேன்

## 1. விநாயகர் துதி



கதிக்கும் கவிக்கும் கவியின் பொருட்கும்
துதிக்கை எனக்குத் துணே.

# 2. கலைவாணி துதி



உன்னி உருகியபோ(து) உள்ளத்தினில் வந்து
கன்னிக் கவிதந்த கற்பகமே—அன்னையே
பூவும் புதுக்கவியும் புன்னகையும் இன்முகமும்
தாவென் னுளங்குளிரத் தான்.

# 3. "புத்த தரிசனம்"



[அனுரதபுரியில், புத்தரின் சிலையைக் கண்டு பாடியது].

ஞானஒளிச் சுடர்வீசும் திருமு கத்தில்
  நடனமிடும் சாந்தச்சுடர் கண்டேன் கண்டேன் ;
ஈனருக்கும் விலங்குகட்கும் தருக்க ளுக்கும்
  எல்லோர்க்கும் மாரியெனக் கருணை பெய்த
ஆனனஞ்சேர் விழியிரண்டும் மெல்ல மூடி,
  அவற்றிடையே அருளருவி வழியக் கண்டேன் ;
மோனமது முகந்தவழச் சாந்த மெய்தி
  முன்னிருக்கும் நின்னுருவம் கண்டேன் கண்டேன்.

கூருத மோனவாய்ச் செவ்விதழ்கள்
கொல்லாமை பெரிதென்று கூறக் கேட்டேன் ;
ஆருகப் பெருக்குமிரு கருணைக் கண்கள்
அவற்றிடையே அன்புமழை பொழிக வென்று
கூருமற் கூறுவதும் கேட்டேன் கேட்டேன் ;
குதித்திட்டேன் ; வாய்வெருவிக் குழறி யிட்டேன் ;
தேருமற் றிரிந்திட்டேன் ; தேவ தேவா !
தெள்ளமுதே, எனஅழுதேன் கரைந்து நின்றேன்.

# 4. " தமிழ்க் கவிப் பித்து "

பொன்னின் குவையெனக்கு வேண்டிய தில்லை—என்னைப்
போற்றும் புகழெனக்கு வேண்டிய தில்லை;
மன்னன் முடியெனக்கு வேண்டிய தில்லை—அந்த
மாரன் அழகெனக்கு வேண்டிய தில்லை

கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா—உயிர்க்
கம்பன் கவியெனக்கு வேணுமே யடா
தின்னத் தமிழெனக்கு வேணுமேயடா—தின்று
செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா.

உண்ண உணவெனக்கு வேண்டியதில்லை—ஒரு
உற்ரூர் உறவினரும் வேண்டியதில்லை;
மண்ணில் ஒருபிடியும் வேண்டியதில்லை—இள
மாதர் இதழமுதும் வேண்டியதில்லை.

பாட்டில் ஒருவரியைத் தின்று களிப்பேன்—உயிர்
பாயு மிடங்களிலே தன்னை மறப்பேன்;
காட்டில் இலக்குவனைக் கண்டு மகிழ்வேன்—அங்குக்
காயுங் கிழங்குகளும் தின்று மகிழ்வேன்.

மாட மிதிலைநகர் வீதி வருவேன்—இள
மாதர் குறுநகையிற் காதலுறுவேன்;
பாடியவர் அணைக்கக் கூடி மகிழ்வேன்—இளம்
பச்சைக் கிளிகளுடன் பேசி மகிழ்வேன்.

கங்கை நதிக்கரையில் மூழ்கி யெழுவேன்—பின்பு
காணும் மதுரைநகர்க் கோடி வருவேன்
சங்கப் புலவர்களைக் கண்டு மகிழ்வேன்—அவர்
தம்மைத் தலைவணங்கி மீண்டு வருவேன்.

செம்பொற் சிலம்புடைத்த செய்தி யறிந்து—அங்குச்
சென்று கசிந்தழுது நொந்து விழுவேன் ;
அம்பொன் உலகமிர்து கண்டனேயடா—என்ன
ஆனந்தம் ஆனந்தம் கண்டனேயடா.

கால்கள் குதித்துநட மாடுதேயடா—கவிக்
கள்ளைக் குடித்த வெறி ஏறுதேயடா!
நூல்கள் கனித்தமிழில் அள்ள வேண்டும்—அதை
நோக்கித் தமிழ்ப்பசியும் ஆறவேண்டும்.

தேவர்க்(கு) அரசுநிலை வேண்டியதில்லை—அவர்
தின்னும் சுவையமுது வேண்டிய தில்லை.
சாவிற் றமிழ் படித்துச் சாக வேண்டும்—என்றன்
சாம்பல் தமிழ்மணந்து வேக வேண்டும்.

## 5. " தயங்காதே மனமே "

வீரனைப் போலமுன் நடப்பேன்—இந்த
வெந்துயர் ஆற்றினைக் கடப்பேன் ;
பாரினில் அஞ்சுவதில்லையே—யார்க்கும்
பயந்தினிக் கெஞ்சுவ தில்லையே.

அலையலையாய்த் துன்பம் வருதே—என்னில்
ஆயத்தம் நீந்திடத் துணிந்தேன்
*இலையில போகவோர் புணையே—அஞ்சேன்
என்னிரு கரங்களே துணையே.

* இல்லை இல்லை என்பதன் குறுக்கம்.

# 6. "காதற் பூக்கள்"



மையாம் இருள்படர்ந்து மனமிருண்டேன் ; பூவுலகப்
பொய்யால் உளமுலர்ந்தேன் ; பூங்கிளியே ! நின்னன்பாம்
நெய்யாற் குளிர்வித்து நின்பூந் திருச்செல்வக்
கையால் உயிர்த்திரிக்குத் தீபமிடு, கண்மணியே.

இனிமையிலே பாலின்பம் ; ஈதலிலே திருவின்பம் ;
கனிவினிலே யாழின்பம் ; கவியினிலே உயிரின்பம் ;
நினைவினிலே அன்பின்பம் ; நிலவொளியில் நானிருக்கும்
தனிமையிலே நின்னின்பம் தோன்றுதடி தையலாளே.

நின்னை மறந்திடுவேன், ஆனால்என் நேரிழையே !
வன்ன மயிலினிலே, வான்சிவக்கும் அந்தியிலே,
தன்னந் தனிமையிலே, தண்மதியம் பார்க்கையிலே,
கன்னிக் கவியினிலே, கலக்குதடி நின்னழகே.



மானே கலைதேட, மயில்கள் பெடைதேட,
வானேகும் அன்றில்களும் வாழத்துணை தேட,
ஊனோ டுளமுருகி உயிரெல்லாம் காதலிக்க,
நானே தனியிருத்தல் நன்றாமோ நாயகமே.

செல்லும் கவிக்கனவும் சிந்தனையும் நீயாகிச்
சொல்ல அறியாமற் றுடிக்கின்ற என்நெஞ்சில்,
மெல்ல அசைந்துவரும் மென்பசும்பூந் தென்றலிலே,
முல்லை மலர்போல் முகிழ்க்குதடி உன்காதல்.

வாடாத காதலிது ; வற்றாத காதலிது ;
தேடாத மூப்பினிலும் திரைநரைக ளூற்றாலும்,
பாடா திருதயமே பாழடைந்து போனாலும்
வாடாது வாடாது ; வாசமுடன் வீசுமடி.

வழிபார்த் திருந்தேன் ; நின் வண்ணமுகங் காணுகிலேன் ;
விழிபூத்துப் போயினவே; வீதியெலாம் என்னுயிரைப்
பழிபார்க்கும் கடைக்கண்ணும் பாடுகின்ற செந்தமிழின்
மொழியாத்த குறையுமாய் முகமின்னுந் தேடுகிறேன்.

வருவாயென எண்ணி மலர்பறித்து வைத்தேனே ;
தெருவாயில் வந்திலைநீ ; தேடியபூ வாடினவே ;
உருவாய்த் தெரிவதெலாம் உன்முகமென் றெண்ணி
[யெண்ணித்
திருவாய் புலம்புகிறேன், சிந்தனையின் ஓவியமே !

2432—2



சாயும் மரக்கிளைகள் தண்மலர்ப்பூங் கொத்துகளால் ;
போயணையும் குயிலெல்லாம் பூங்கிளையில் ; ஆனாலென்
நீயருகே யில்லையெனில் நிறம்பூத்த இம்மலர்கள்
வாயவிழ்ந்து மலர்ந்தாலென் வாடிவிழுந் துதிர்ந்தாலென்.

பள்ளி வழியினிலே, பாம்படுத்த பற்றையினுள்
முள்ளின் நடுவினிலே, முகையவிழ்ந்த மலர்கண்டு
கொள்ள அறியாது குழறியழும் சேய்போல,
உள்ளம் பறிகொடுத்தேன் உனையடைய லாகாதோ.



ஊழ்வினையின் காற்றெதிரே உன்னன்பைப் பாயாக்கி,
வாழ்வென்னும் படகிதனை வாரிதியில் விட்டேனே ;
ஆழ்கடலின் திசையறியேன் ; அன்றியொரு
[துறையறியேன் ;
ஏழ்கடலும் அலையுமோ, எங்கிதுதான் போய்விடுமோ.

# 7. பெண்மையின் வெற்றி

[மகத தேயத்தரசனிடம் தனஞ்சய முனிவர் யாகத்திற்குப் பொருள் தேடிவந்து நின்றார். அரசன் தன் தேவியுடன் லீலை புரிந்து, பெண்மையின் மோகத்தில் மூழ்கியிருந்தமையால், முனிவரை அப்புறப்படுத்துமாறு காவலாளிக்குப் பணித்தான். முனிவர் வெகுண்டு அவரிருவர் கண்களும் குருடாகும்படி சபித்தனர். இளங்கோவாகிய அரசன் மகன் சுதனன், தெற்கே பொதியமலைச் சாரலில், குருகுல வாசத்தில், சகல கலைகளும் பயின்று கொண்டிருக்கையில், அதனைக் கேள்வியுற்று ஆற்றாத் துயருடன் மகத தேயத்திற்கு வருகின்றான். அரசியலைக் கையேற்று நடாத்தும் மந்திரியின் மூலம் அவர்கள் இருப்பிடத்தை அறிந்து, அங்கே வந்து,]

"தந்தையே! பொறுக்கேன்" என்னும்;
தாமரைக் கண்ணிற் றூரை
சிந்திடப் பொருமி விம்மும்;
திகைத்து வெய் துயிர்த்து நிற்கும்;
புந்தியைத் திருகி நிற்கும்;
புழுவனல் பட்டா லென்ன,
வெந்துதன் தாதை முன்னே
விழுந்தனன் சுதனன் அந்தோ! 1

தாய்பத முளரிக்குள்ளே
தன்முகம் புதைத்துக், கண்ணீர்
தோய்தர விம்மும்; வெய்ய
சுடுமுனி மொழிந்த சாபம்
காய்தரக் கண்களற்றார்
காலிணை தழுவி, அன்பு
பாய்தர, மகவு வீழ்ந்தாற்
பரிப்பரோ பயந்தோர் அம்மா! 2

விழிகுரு டான தாயை
வேந்தனைக் கண்ட போழ்து,
மொழிகுரு டானுன் மைந்தன் ;
முகம்புதைத் தழுது நொந்து,
" பழியிது பொறுக்கேன் எந்தாய்,
பார்த்திடக் கண்க ளின்றி
அழிவதோ " என்றான் பெற்றோர்க்(கு)
ஆவியை யுதவ நின்றான். 3

" குன்றமும் கொடிய கானும்
கோடையும் பனியு மெல்லாம்
தென்றலும் நிலவு மாகச்,
செந்துணர் அமளி யாக,
வென்று நற்றவங்கள் ஆற்றி
விழிமலர் பூக்கச் செய்வேன்
ஒன்றதே நினைந்தேன், எந்தாய் !
உரைத்திட வேண்டும் இன்னே." 4

" பாலனென் றஞ்ச வேண்டாம் ;
பகர்ந்திடும் ; இன்னே செல்வேன்
ஞாலமும் வானுமெல்லாம்
நடுங்கியென் சிரமேல் வீழும்
காலையும் அஞ்சேன் ; நெஞ்சம்
கலுழ்ந்திலேன் ; இன்னும் ஐய !,
சீலமும் தவமும் கொண்டேன் ;
சிந்தனை செய்வ தென்னோ. 5

மீறிய பரியோர் கையின்
விந்தையா லடக்கிப், போர்முன்
கூறிய கூறி யாங்கு
கொண்டுழல் வித்தை யன்றிச்

சீறிய புலன்க ளைந்தும்
  சிந்தையா லடக்கும் வித்தை
தேறினேன், தந்தாய் ! நெஞ்சத்
  திடமுளேன் ; அஞ்சல் வேண்டாம்.'' 6

'' அஞ்சினே மல்லேம் மைந்த !
  அரசரிற் பிறந்தோ மன்றே !
விஞ்சுநின் மழலை கேட்பின்
  விழியிணை பெற்றே ராவேம் ;
கஞ்சமென் கரத்தாய் ! எங்கள்
  கண்குரு டாய பின்பு
நெஞ்சமுங் குருடோ அப்பா,
  நீயெமைப் பிரிய வேண்டாம்.'' 7

'' திங்களு மிரண்டே எந்தாய்,
  செய்தவம் முடித்து மீள்வேன் ;
இங்கினி வருத்த மேனோ ''
  எனவிவன் கூறு முன்னம்
பொங்கிய தாய்மை வெள்ளம்
  புந்திசெய் அணையைத் தள்ள,
மங்கையும் மறுகி வீழ்ந்து
  மலரிதழ் கனிந்து சொல்வாள். 8

'' அள்ளியான் எடுத்த அன்பின்
  அமுதமே ! பிள்ளைத் தேனே !
கொள்ளலா நிதியாம் என்றன்
  குருவிழி யிழந்த பின்பும்,
உள்ளமும் உயிரு மெல்லாம்
  உலகிடைப் பிணித்த நீயே
உள்ளுவாய், பிரிவே யென்னிற்
  கொள்ளுவாய் உயிரு ''மென்றாள். 9

கொன்னுனை வேல்கைக் கீந்து
குதலைவாய்ப் பால்து டைத்துச்
சென்முனை காட்டித் தங்கள்
சிறுவரைப் போக்கும் மாதர்
நன்மனை பிறந்த நீயே,
நடுங்குவ திதற்கே என்றால்
அன்னையே, ஆண்மை தானும்
ஆர்வயிற் றுதிப்ப தம்மா. 10

அஞ்சுவ தெதற்கே அம்மா !
அவலம் நீ உரைப்ப தெல்லாம்
நெஞ்சினிற் றிண்மை உண்டு ;
நீரிரு தெய்வ முண்டு ;
வஞ்சியர் கண்ணுக் கஞ்சா
வலிமையும் உரனு முண்டு ;
எஞ்சிய தென்னோ சொல்லாய் ;
இருந்தவம் செய்ய ” என்றான்.

“ என்விழி யிழந்தும் நுங்கட்
கேற்றன செய்வ தல்லால்
வன்பழி சுமக்கேன் ” என்னா
வாய்வழி உணர்வு பாய
அன்பழிந் தாரும் என்ன,
அகமுடைத்(து) அலையிற் பாய,
என்பழிந் துருகித் தங்கள்
ஏந்தலை அணைத்துக் கொள்வார். 12

அணைத்தகை ஒருங்கு சேர
அழுதகண் ணீரும் சேர
இணைத்தன உள்ள மன்றி
என்புமாம் என்ற வாறு,

அணுத்தொறுங் குழைவான் தன்னை
ஆவியாற் தோய்ந்து தோய்ந்து
தணித்தனர் அன்புத் தாகம்
தழுவினுர் தழுவி ஞரே. 13

புல்லுவார் தம்மை நீத்துப்
போந்துபின் நோக்கி நிற்பான் ;
செல்லுவான் ; திகைத்து நிற்பான் ;
திரும்புவான் ; பெற்ருேர்க்(கு) அன்பு
சொல்லுவான் ; மீண்டுஞ் செல்வான் ;
தோகையை நோக்கி நிற்பான் ;
'வெல்லுவேன் கலங்கே னென்ற
வீரனுங் கலங்கி ஞனே. 14

[சென்றவன் காட்டின் நடுவில், ஒரு நதிக் கரையிற் சில காலமாகக் கடுந்தவம் செய்கின்ருன். பருவம் மாறுகிறது.]

வேறு

கொன்றைகள் தளிர்த்தன ; கொம்புகள் சிரித்தன
குன்றுகள் சிலிர்த்தன ; கோங்குக ளலர்ந்தன ;
கன்றுகள் குதித்தன ; காடுகள் தழைத்தன ;
மென்றளிர் குழைத்தன ; நின்றவர் மருண்டார்.

புள்ளினம் மகிழ்ந்தன ; புத்திசை படித்தன ;
கள்ளிணர் அவிழ்ந்தன ; கல்லிடை சொரிந்தன ;
கிள்ளைகள் அணைந்தன ; கேலிகள் புரிந்தன ;
துள்ளின குதித்தன ; புள்ளியின மான்கள்.

தாமரை மலர்ந்தன ; தண்தடம் மிளிர்ந்தன ;
காமரம் மயங்கின ; கள்ளொடு கிடந்தன ;
பூமலர் சொரிந்தன ; புள்ளினம் அணைந்தன ;
நாவலர் மருண்டார் ; கோவலர் மகிழ்ந்தார்.

## வேறு

மயிலாடுவ குயில்பாடுவ அயலூடுவ மடமான்
கயலோடுவ வயலோடைகள் களியாலிடை தெறியா
மயலோடுயிர் புகுகின்றன வரிவண்டினம் ; அதனுற்
செயலோடுயிர் தழையுற்றன சிலவற்றிய மரமே.

மாரன்மண வாளன்வரு வானென்றிள வேனில்
சீரின்திறம் ஓர்கண்ணடி* தேர்கின்றனள் என்னுத்
தாரின்மலர் நாறும்மலர் தாதின்மலர் சூடி
நீரின்கரை தோறும்தரு தெரிகின்றன நிரையாய்.

எஞ்சுந் துனிநீடிப்பிரி வென்றும்பெரி தாகி
அஞ்சும் பொழுதன்பின் துணே வேனிற்பொழு தாக,
நெஞ்சந் தனில்எழுகின்றது நேயச்சுட ரதனுற்
கெஞ்சுங்கிளி கொஞ்சுங்குயில் துஞ்சுந்துணே கூடி,

மாதின் துயில் செய்கின்றனள் மன்னன்மெல வந்து
பாதந்தொட மெய்யிற்சிலிர் பாயுந்திற மென்னத்
தாதுஞ்சில தடமுஞ்சில தடவித்தவழ் தென்றல்
ஊதுந்தொறும் ஊதுந்தொறும் உயிருற்றன மரமே.

மதுவின்மல ருலகெங்கணும் மலர்வுற்றெழில் ஒழுகப்
புதிதென்றெரு சுகமெய்திடப் பொதியின்வளி தடவ
இதமன்பினில் உயிருக்குயிர் இணேயுந்துணே புணர
மதனன்கணே மலரஞ்சொடு வருகின்றனன் அம்மா.

## வெண்பா

எங்கும் மலர்சிரிப்ப ஏந்திழையார் நொந்திருப்பப்
பொங்கும் மதுகரங்கள் போதிருப்ப—அங்கங்கே
தேமா நணேயூழ்ப்பத் தேரேறி வந்தடைந்தான்
கோமான் இளவேனிற் கோ.

---

* கண்ணடி - கண்ணுடி

## வேறு

அருகித் துவளுமொரு
அணியிடையு நொசியநொசியச்
சொருகிச் சொருகாத
சோர்குழலும் அலையஅலைய
ஒருகை குடமணைய
ஒருபாற்சென் றிடையும்சரிய
ஒருகை மெலவீசி
உயிர்ப்பாவை வருகின்றுளே.

## வேறு

ஓவியரும் கைசோர்வார் ;
உயிர்பெய்து பாவிசைக்கும்
காவியரும் நாவிழப்பார் ;
கண்ணென்னும் நஞ்சுண்ட
காவிஅரும் புகள்கண்டால்
கண்கரைந்து வானோர்தம்
தேவியரும் புலம்பாரோ
தேவர்குலம் மாய்ந்ததென்று ;

மானினங்கள் பின்சென்ற ;
மடமயில்கள் பிரியாவாம் ;
தேனணையும் மலர்க்கொம்பர்
செங்கரத்திற் கேதாழும் ;
கானடுவே புகுந்தோடும்
கவிஞருளத்(து) ஓவியம்போல்
தானடக்கும் நடையினுக்கே
தரணிவிலை கொள்ளாதே.

மலர்கொய்வாள் ; மறித்தோடி
உயிர்கொய்வாள் ; மதுவூறி
அலர்செல்லா முகைகொய்வாள் ;
அன்றலர்ந்த தாமரைக்கே
பலர்சொல்லா வசைவைத்தாள்
பைந்தொடியாள் நதியின்பால்
அலையின்வாய்க் குடமொண்டாள் ;
அஞ்சனக்கண் பிறழ்ந்ததம்மா.

கண்டாளே கரியகண்ணுல்
காமன்தன் கொடியன்னுள் ;
வண்டாடும் கண்பிறழா ;
வரிவளைக்கை குடங்கொள்ளா ;
மொண்டாலும் நீர்மொள்ளாள் ;
முந்துதமிழ்ப் பழங்கவிதை
உண்டாரின் மெய்ம்மறந்தாள்
ஊற்றமுதக் கிளிமொழியாள்.

நதிக்கரையில் உளம்வைத்து,
நாணடைப்ப உடல்கொண்டு,
மிதிக்கின்ற வழியறியாள்
மீளுகின்ற பேதையாள்
விதிக்கரையில் மோதுகின்ற
கலமாகி வெய்துயிர்த்தாள் ;
உதிக்கின்ற எண்ணமெலாம்
அவனன்றி ஓர்கிலாதாள்.

தேர்பிலாள் திகைக்கின்ருள் ;
சிறிதேகித் தேடுகின்ருள் ;
சோர்படாள் துணிகின்ருள் ;
துகில்போர்த்த வனமுலையின்

வார்படாப் பாடன்ன
வைத்தஅடிக்(கு) அக்குடத்தின்
நீர்படாப் பாடன்ன
நெஞ்சகமும் பைங்கிளிக்கே.

செந்தீக்கு விறகூட்டித்,
திருமுனிவன் அடிபோற்றி,
நந்தாவிளக் கேற்றி,
நான்மறையின் முனிவோனே
எந்தாயென்(று) இறைஞ்சுகிற
இவள்யாரோ, எண்ணிஎண்ணிச்
சிந்தாவெய் துயிர்க்கின்ற
சிந்தனையும் வேறுரோ.

'வெண்பூக்கள் கைப்படுக
விரைந்தடைவா ராமாயின்,
மண்பூத்த மாமரங்காள்,
மலர்காள்,' எனஓடிக்
கண்பூத்து மூடியபிற்
கலங்கிடுவாள் ; கைபதறப்
புண்பூத்த நெஞ்சாட்குப்
பூமுல்லை கைவருமே.

## II

[பேதையின் உள்ளத்திலே அவன் கோயில் கொண்டு விட்டான். அந்த இருதய மணாளனைப் பூசை செய்தாள். கன்னியுள்ளத்திலே மலர்ந்த அன்பு மலரை அவன் பாதங் களிலே அர்ப்பணித்தாள்.]

மறுநாள் நதிக்கரையில்,

பொழியும் சுடர்ஞானம் பூத்தமுகம் ; கண்களிலோ
வழியும் கருணைமழை ; வாய்க்கடையிற் செவ்விதழும்
மொழியும் தவமோனம் ; மூடியதன் பெற்ருேரின்
விழியும் மனத்தாகி வீற்றிருக்கும் அவன்முன்னே.

அன்னம் நடந்தாளே ; அவள்பின்னே நாணெளிப்ப,
முன்னின்(று) உயிரிழுப்ப, முன்விதியும் தானுந்த,
மின்னும் மயிலியலும் மெல்லநடந்(து) அடிபழகி
வன்ன மலர்க்காவில் வந்ததென வந்தாளே.

கொய்தாள் நறுமுல்லை ; கூப்பியிரு கைகளாற்
பெய்தாள் திருவடிக்கே ; பேதைமையும் தன்னன்பும்
கைதான் நிறைத்திட்டுக் காலிடுவாள் பூவுடனே;
எய்தாத துண்டோ இவள்தவத்திற் கேயம்மா.

விழித்தான்; அவன்கண்டான்; வெண்மலருங் கண்டானே;
அழித்தாள் தவம்முழுதும் அஞ்சனக்கண் அம்பாலே;
பழித்தோடுங் கயலாலே பாகூறுஞ் செவ்விதழைச்
சுழித்தோடும் நகையாலே துடியிடையின் நடையாலே.

வேறு

**மஞ்சரி :**

பிழைத்தேன் அறியாப் பேதை யானே !
இழைத்தேன் குற்றம் என்பிழை பொறுக்க.

சுதனன் :

நீபிழை செய்யின் நெஞ்சகங் கொள்ளேன் ;
ஆயின் நின்றன் ஆருயிர் குடிக்கும்
அஞ்சனக் கண்கடை அவைபிழை செய்யின்
நெஞ்சம் பொறுக்குமோ வஞ்சிக் கொடியே.

மஞ் :

அழியாத் தவத்தை விழியால் யானொரு [கேன்
பெண்கெடுத் தேனெனும் பெரும்பழி பொறுக்
செல்வேன் செல்வேன் தேவே.

[மெல்ல நடந்து போகிருன்]

சுத :

நில்நில் ; என்றன் நெஞ்சக் கிளியே !
கலங்கா திறுத்த கருங்கல் மலையும்
மலங்கித் துவளும் மரவேர்க் குடையும் ;
தீயோ, சீறிச் சினந்து வீசினும்
நெகிழ்ந்து வழியும் நீர்க்கவி யாதோ ?
பெண்ணே, உன்றன் கண்ணினும்
மாந்துளி ரனைய மலர்க்கை தீண்டி
அடிகள் சேர்த்திய அரும்பிய முல்லை
மெல்லிய வாயினும் கொல்லுமென் நெஞ்சே,
நேரிழாய் ! நில்நில் நின்றிடு.

மஞ் :

வேண்டாம், வேண்டாம், விட்டிடும் மாதவ !
அருந்தவர் மனையில் இருந்துபல பணிகள்
புரிந்தவர் பொன்னடி போற்றித் தொழுவேன்.
அதனல்,
அறம்பிழை படுமே ; அருள்பிழை படுமே ;
கொடிது, கொடிது மாதவர் சினத்தீ.

சுத :

அதனினுங் கொடிதே நின்முக மதியம்
அஞ்சேன் அத்தீக்(கு) உன்முகங் கண்டபின்
அன்பே ! அவர்சுடு மொழியிற் கனலினும்
புன்னகை யூரும் நின்மலர் முகமாம்
குளிர்ந்த மதியிற் கொடுந்தீ யுண்டே.

மஞ் :

யானோ கொள்ளேன் ; மாதவன் கொடியன்
வசந்தப் பூங்கொடி அசைந்தசைந்(து) ஒசிவபோல்
நுடங்கும் நின்னுடை ஒடுங்கிடை கண்டும்
குடங்கொண்டதனுள் நீரும் கொண்டு
வருகென ஏவிய வன்கணாளன்
கொடிய னன்றிக் கோதாய் ! வேறெவன் ?
பாவாய் ! நின்னை நீர்கொள ஏவியோர்
மாந்துளி ரனைய மலரடி தானுங்
கண்டிலர் கொல்லோ கழறாய்.
ஆம், ஆம்,
மானின் மென்மையும் மருள்நோக் கழகும்
ஊனுக் கறுப்பார் உணர்வதும் உண்டோ !
காட்டில் மலர்ந்து கடிமணங் கமழ்ந்து
காட்டில் யாரும் காணாதிருக்கும்
பூவினைப் போன்றாய், பாவாய் நீயும்,
வானர மகளிர் வந்து நின்னுடை
ஏவலுக் கேங்கி நிற்பார் ; நீயே,
கானகம் புகுந்த காரணம் யாதோ ?

மஞ் :

மன்னர் வணங்க மணிக்குடை நிழற்றச்
செங்கோல் ஏந்தும் எங்கோன் நும்கை

வெங்கான் தன்னில் வெயிலிலும் மழையிலும்
கமண்டல மேந்தும் காரண மென்னே ?

சுத :

கானகம் புகுந்த காரணம் கேட்டேன் ;
மறந்தேன் நங்காய்! மன்னித் தருள்க. [னில்
நீயோ காட்டிற் காணு(து) உறைவதும் இலையெ
இன்று,
எத்தனை கோடி மன்னவர் உயிரோ !
எத்தனை போரோ ! எத்தனை களமோ !
நின்னால்,
எரிந்ததும் கரிந்ததும் எத்தனை நகரோ !
சரிந்ததும் மண்ணில் எத்தனை முடியோ !
கானகத் தல்லநின் கண்ணின் சாயல்
மானகத் திருப்பதும் மங்காய் பிழையே.

மஞ் :

ஆயின், அரசர் அருந்தவர் போன்று
கானக நதியின் கரையில் வந்து
கள்ளம் ஒன்றறியாக் கன்னிப் பேதையர்
உள்ளமும் உயிரும் கொள்ளுதல் வீரமோ !
நன்று, நன்று, நான்வரு கின்றேன்.

[வேகமாகப் போகிறுள். பின் தொடருகிறுன். அவள் சுற்றிச் சுற்றி ஓடி ஒரு புதருள் மறைகிறுள்].

சுத : (தனக்குள்)

ஆ ! மறைந்தனளோ ஆவியின் உயிரே.
அனமே, அனமே, அன்பே
எங்கு ஒளித்தனையோ என்னுளம் கவர்ந்து
சிறர் தும்பியைச் சிறுமுள் ஏற்றித்

துடிப்பத் துடிப்பச் சுற்றுதல் போலப்
பிரிவால் என்னுயிர் துடிப்பத் துடிப்பக்
காண்பது முனக்கோர் களிவிளை யாட்டோ?
வந்திடு, வந்திடு,
ஆ! ஆ!
பேதையர் மனமுங் கல்லோ!

[சுற்றி முன்னே அவன் தவஞ்செய்த இடத்திற்கு வந்து கல கல வென்று சிரிக்கிருள். அவன் அங்கே போகிருன்.

சுத:

ஓடி ஒளித்து உருவம் மறைத்துத்
தேடி வந்தனையோ ?

மஞ்:

தேடி வந்தவர்
யார் ? யார் ? இதுவும் நகையே.
முல்லைப் பூக்களை முற்றும் மறந்தேன் ;
எடுத்துச் சென்றிட இவ்விடம் வந்தேன் ;
இதோ இந்த இன்மலர் அரும்புகள்
முனிவன் பூசை முடித்தற் குரியன.

சுத:

ஆருயிர்க் குயிலே! அங்ஙன மாயின்
ஏனே இட்டனை என்பதத் துக்கே.
மானே! கூருய் மலர்வாய் திறந்து.

மஞ்:

யானும் அறியேன் இதய மன்ன !
அதோ, அதோ அக்கிளை தன்னிற்

சோடிக் கிளிகள் கூடிக் கொஞ்சி
ஒருகனி தன்னை அருகணைந்(து) உண்ணும்.
தென்றல் அணைந்து தீண்டும் மலர்களை ;
செங்கதிர் கொஞ்சச் சிரிக்கும் தாமரை ;
கடலோ மெல்லக் கரையினை வருடும்.
வானோ வளைந்து மறிகடல் அணைக்கும் ;
யானோ உமக்கு மலரிடில்.........
குயிலினைக் கேட்பிற், கொஞ்சும் கிளிகளை
மலர்களைக் கேட்பின், மன்னா ! அவைதான்
யாது பகரும் பேதையைக் கேட்பின்......

சுத :

ஆருயிர் கனிந்த அன்பின் அமுதமே !
பிரியேன் இனியே.

மஞ் :

ஆ, ஆ, என்றன் ஆருயிர் மாரா !
பாவியென் மனத்தின் ஓவிய உருவே
இதுவும் மெய்யோ இதோ என்மடமான் ;
அதுமேல் ஆணை (மானைக்காட்டி)

சுத :

உடல் வேகினும், உள்ளணுத் தோறும்
நின்னன் பெழுதி, நின்முக மெழுதி,
நின்னுடைக் காதல் நெகிழ்ந்து வழியும்
வேனிற் தென்றலில் விரிந்த முல்லை—
உகந்து எங்கும் சுகந்தம் வீசும்
வெண்பூ முல்லை—விரிமலர்க் கரத்தால்
என்னடிக்(கு) இட்ட இளநகை முல்லை—
அதுபோல் மலர்க எம்முடைக் காதல் ;
அதுபோல் மணக்க எம்முடைக் காதல் ;

அதுபோல் வளர்க தூய காதல் ;
அன்பே,
வாடா முல்லை வைத்தனை அடிக்கே
வாடாக் காதல் மலரும் தந்தனை.

மஞ் :

மன்ன, இதுஎவ் வுலகம் !

சுத :

மானே ! நானும் அறியேன்.

மஞ் :

மறவேல் பேதையின் மனம்உயிர் யாவும்
அறவே உமக்கே.

சுத :

நீயே என்னுயிர். நெஞ்சில் நீயே.

வேறு

தேன்சிந்தும் மொழியாளும்
சிந்தையிலே காதலுமாய்
ஊன்கசிந்து மயங்குகிறன் ;
ஒருநாளோர் நடுநிசியில்
கான்வந்த தெதற்கென்றும்,
காரிகையாள் யாரென்றும்
தான்வந்த தெதற்கென்றும்,
தனிமையிலே நினைக்கின்றன்.

கனவுவிழித் தெழுந்தவன்போல்
காதலெனும் வெறியொழிந்து
வினவுகின்றன் ; பெற்றேரின்
விழியொன்றே மனத்துதிப்ப,

நினைவிழந்து, நெஞ்சிழந்து,
நெக்குருகி, விம்மி விம்மி,
வனமுழுதும் எதிரொலிப்ப,
வாய்குழறிப் புலம்புகிறன்.

மயங்குகிறன் ; மலர்க்கரங்கள்
பிசைந்திடுவான் ; மறித்தெழுந்து
தியங்குகிறன் ; விழுந்தழுது
தேம்புகிறன் ; திசையெல்லாம்
பயங்கரமே உருவாகிப்
பார்த்தவனைச் சிரிப்பபோலும் ;
இயங்குகின்ற உடலினுள்ளே
இருப்பதுவும் உயிரலவே.

வேறு

" திங்களும் இரண்டு சென்ற ;
செல்வனும் வருவான் என்று
கங்குலும் பகலும் எல்லாம்
காலடி காதால் ஓர்ந்து
தங்கண்ணைத் தடவிப் பார்க்கும்
தந்தைதாய் அங்கே ; இங்கே
மங்கையின் மையல் வீழ்ந்து
மாழ்கிறேன், பாவி " யென்பான்.

" இரவெலாம் துயிலாராகி
இருக(ண்)ணும் திறக்கு மென்று
சருகெலாம் வீழக்கேட்டுத்
தம்முடை மைந்தனென்று

அருகினில் அணைக்க இப்போ(து)
அவர்கரம் நீட்டு வாரே
நரகினில் வீழ்வே னிங்கே
நங்கையோ(டு) இருக்கின் றேனே."

காட்டிய கண்கள் தம்மைக்
கையினுற் புடைத்துக் குத்தும் ;
ஊட்டியே மொழிந்த நாவை
ஊனொடு பிடுங்கும் ; அன்பு
பூட்டியே அழைத்த கையைப்
புவிமிசை மோதும் ; அந்தக்
காட்டிடை அவனும் அந்தக்
காரிருள் தானும் அம்மா !

" கடமையே பூண்டேன் ; என்றும்
கலங்கிடேன் ; புலன்கள் செற்றேன் ;
வடிமலர்க் கண்ணார் மோக
வானர அரம்பை மாதர்
மடிமிசை வரினும் காணு
மனத்தினேன் ; இந்த நஞ்சுக்(கு)
அடிமையு மான தென்னே ;
அதிசயம் !" என்று நையும்.

காடுறத் திரியும் யானை
கடுமரம் முறித்த போது,
கோடது கழன்ற தேபோல்
கும்மிருட் கூட்டத் துள்ளே
ஆடுமக் கிளைகட் கூடே
அடியினில் வானக் கோட்டிற்
கூடுற எழுந்து தோன்றும்
குளிர்மதிப் பிறையின் கீறு.

அந்தநல் இருளி னுள்ளே
அடிமிசை அடிமேல் வைத்து
வந்தனள் ஒருத்தி அங்கே;
மண்மிசை கிடப்பான் தன்னைச்
சுந்தரத் தடக்கை கொண்டு
தொடுதலும் விழித்து நோக்கி,
‘வந்தவர் யாவர் இங்கே’
என்றனன் மனத்துச் சீறி.

‘இருதயத் துள்ளார் யாரோ,
இரவெலாம் துயிலா ராகி
ஒருதனி முகத்தை உன்னி
உருகிநெட் டுயிர்ப்பார் யாரோ,
வரைதடம் பொழில்க டந்து
வனமுறங்(கு) இருளில் இப்போது
வருதலுக் குரியார் யாரோ,
அவரிதோ வந்தார்’ என்றாள்.

‘பார்த்திடேன் நின்னை யின்னே
பாவையே! மறப்பாய் என்னை;
சீர்த்திய தவமே கொண்டேன்;
சிறுமையால் மயங்கி விட்டேன்;
பேர்த்தெனை நினைத்திடாதே,
பிழையிது பொறுக்க’ என்று
வார்த்தையில் விடத்தைப் பெய்து
வாயினாற் கொல்கின் றானே.

‘அறிந்திடு கின்றேன் ஈதோ
அன்பினால் விளையாட் டென்று;
துறந்துநீர் செலினும், செல்லும்
தூரத்தே பிரிந்து செல்லும்;

அறந்தவம் உணர்ந்தீர் ; என்றும்,
அன்பனே, விளையாட் டேனும்
மறந்திடு, என்ற சொல்லால்
மங்கையைப் பிளக்க வேண்டாம்'

என்றுரைத்(து) இருகை கொண்டு
இளங்கிளி அணைத்த லோடும்,
மென்றளிர்க் கரத்தை எற்றி,
வெடிபடு சொல்லாற் சீறிச்
"சென்றிடு, தீண்டல் வேண்டாம் ;
செய்வதும் விளையாட் டன்று"
என்றனன் ; மருண்டு நின்றாள்
இளம்பிணைச் சிறுமான் போல்வாள்,

கலங்கிய கண்ணிரண்டும் ;
கவிழ்ந்தது முகமே ; பூத்து
இலங்கிய நகையும் வாடி
இருண்டனள் அன்ன மன்னாள்,
விலங்கினள் சிறிதே அப்பால் ;
வெகுள்வதும் என்னே ! சீறும்
புலன்களைச் செற்ற நீவிர்
புனிதரே யன்றோ ! அன்பே.

வேறு

'அன்பே! யென்று மெய்குளிர்ந்(து) என்னை அழைக் காதே;
நின்பேர் நஞ்சு ; நின்னுடை நாவுங் கொடு நஞ்சு ;
உன்பால் ஊறும் சொல்லெலாம் நஞ்சாய் உணர்கின்றேன்
என்பால் வாழ்ந்த மெய்த்தவம் யாவும் இழந்தேனே.

கானம் வந்தேன் பெற்றவர்தம் கண்வேண்டி ;
ஈனம் பெற்றேன் என்னுடை ஏழை இருதயத்தால் ;
ஞானம் பொய்த்தேன்; ஆண்மையின் வீரம் நான்மறந்தேன்;
ஏனிவ் வார்த்தை, மறந்திடு எல்லாம் இருதயத்தே.

"பெற்ருேர் கண்ணே பெற்றிட மன்னன் தவம் செய்தான்
மற்ருேர் பெண்ணுல் மாண்டனன்" என்ற மரபெழுதும்
கற்ருேர் பாடும் ஏட்டிலும் தீராக் கறை பெற்றேன் ;
எற்றே செய்தேன் ; ஏதிது அந்தோ சூழ்ந்த வாறே.

"பாரேன் பெண்ணே நின்முகம் ; இந்தப் பாவியுடை
பேரே நெஞ்சிற் கொள்ளலே ; பின்பும் எண்ணுதே
தீரா அன்பும் மறப்பாய் இனி," என்ருன் சிறுமானேக்
கூராம் அம்பிற் கொண்டறுப்பார் போற் கொடியானே.

"கானம் துஞ்சும் ; காட்டிடை தென்றல் கண்ணுறங்கும் ;
வானந் துஞ்சும் ; வாளரி சீறும் ஒலியன்றி
மோனந் தங்கும் மூடிருள் சூழ்ந்த நிசியினிலே,
ஞானம் வாழும் நன்முனி பள்ளி தனேக் கடந்து.

கண்ணுே துஞ்சா ; கால்களால் மெல்லவழிதடவி
மண்ணுே, கல்லோ, மலேயோ, யாவுங் கடந்துவரப்
'பெண்ணே! என்னே மறப்பாய் மீட்டும் பின்பொருகால்
எண்ணுதே' என்பவர்க்கோ இவ்வழி நடந்தேன்.

ஐயோ ! மன்ன, நீயுளம் வைத்த அன்பெலாம்
பொய்யோ? பூத்த வெண்மலர் நஞ்சாய்ப் போவதுவோ
மெய்யாக் காதல் கொண்டவன்போல மிகநடித்துப்
பொய்யோ வைத்தாய் மன்னவா ! நானுே பொறுக்கேனே.

' என்றோ மகன்வருவான், எப்பொழுதோ மாசகலும்
இன்றே வருவானே ' என்றிருப்பார் திருமுன்னே
சென்றே தவம்விட்டுச் சேயிழையாள் ஒருத்தியினை
நன்றே மணம்முடித்தேன் காண்மின்என நவிலுவனே

உன்னை இரக்கின்றேன் உருகுமனப் பெண்குலமே !
என்னை மறந்திடுவாய்; என்பிழையைப் பொறுத்தருள்வாய்;
இன்னம் இரக்கின்றேன் ; இளகாதோ '' என்றிடவும்
அன்னம் நடைபதறி அடிசாய்ந்த தெனவீழ்ந்தாள்.

## வேறு

'' காக்கும் குலத்துதித்த காவலனே, நான்பேதை ;
பூக்கும் மலர்க்கொடியிற் பொன்னூசல் ஒன்றமைத்து
நோக்கம் மருட்டியெனை நுவன்றதுவும் பொய்யென்று
ஏக்கம் அறியாதேன் எங்ஙனந்தான் அறிவேனே.

சொல்லப் பதைக்கிறதே ; தோழியாம் என்னுடைய
செல்வச் சிறுமானைச் சேர்த்தணைத்துன் இருகையாற்
புல்லுக் கொடுத்ததுமேன் ? பூம்புள்ளி மென்முதுகில்
மெல்லத் தடவியதேன் ! மீதுமடி வைத்ததுமேன் ?

எல்லாம் மறந்திடினும் என்பெயரை வெண்மணலிற்
கல்லால் எழுதிடநான், கடைமுறுவல் செய்ததுவும்
நில்லா மனத்தில் நிலையின்றோ ; என்னுயிரைக்
கொல்லாமற் கொன்றிடவோ கொற்றவனே, வந்தாய்நீ.

வேனில் மலரெல்லாம் விரிந்திருப்ப மதுவெறியால்
தேனிற் குமுதமெனத் தீயரவின் வாய்ச்செல்லும்
கானற் சுரும்பினம்போற் காவலனே உனையடைந்தேன் ;
மோனத் திருக்கின்றாய் ; முறையிதுவோ, முறையிதுவோ.''

" வேதம் அவர்சொலென விதியொழுகும் கற்புடைய
மாதர் தமையடைந்த மன்னவரும் உண்டுலகில் ;
வாதம் மொழிபவளைக் காதலித்து மற்றவளின்
பாதம் பணிந்திரக்கும் பாவியனும் உள்ளேனே.

காதல் சிறிதுமிலை ; கண்ணீரும் நடிப்பன்றோ ;
சாதற் றுயர்மூடித் தன்கணவன் நோகையிலே
வாதம் புரிகின்ற வன்மனத்தாய், நின்போல
ஈது புகல்வாரோ இணைபிரியா அன்புடையோர்."

" இன்ன புகலாதீர் ; என்னுயிரின் உள்நுழைந்து
தின்னும் மொழிதந்தீர் ; தீநுழைந்த வெம்புண்ணில்
இன்னும் கடைவதுபோல் இயம்பாதீர், ஒன்றறியாக்
கன்னி இதயமிது கலக்காதீர், மன்னவனே."

"வன்சொல் பொறுத்தருள்க; வாழ்கொழுநர் தஞ்சொல்லைப்
பொன்சொல் எனக்கொள்ளும் பூவையரும் உண்டுலகில் ;
மின்செல் அணியிடையாய் மெய்க்கணவன் நானன்றோ !
என்சொல் தலைக்கொள்ள இயைந்தாயோ, என்னுயிரே.

"பணியாக் குறையன்றிப் பணித்தநும் வாய்ச்சொல்லை
அணியாக் குறையுண்டோ அடியேன்;" எனத்தாழ்ந்து
தணியாப் பெருங்காதற் றழல்மூள வாய்வெருவி
மணியார் இதழ்பழுத்து மடப்புறவு கூறியதும்.

"என்னை உனதுயிராய் எண்ணியுளம்வைத்திருப்பின்,
நின்னை எனதுயிராய் நெஞ்சினிலே வைக்கவெனில்,
என்னை மறந்திடுவாய் ; என்னுணை, என்னுணை
என்னை மறந்திடுவாய் இளம்பிடியே " என்றிடலும்.

" சாரும் கிளைகளிலே தருக்களிலே உன்னுடைய
பேரும் எழுதிவைத்தேன் பெண்மையினல் ; அவ்விடங்கள்
சேரும் பொழுதெல்லாம் தின்னுவோ? உள்ளுயிரின்
வேரில் அழித்தாலும் விளம்பாதோ மரமெல்லாம்.

நெஞ்சத் தழித்தாலும் நின்பேரை என்னுடைய
கொஞ்சுங் கிளிமறந்து கூருதயர்த்திடுமோ ?
விஞ்சுங் குதலையுடன், வேறிருத்தி ஊட்டியசொல்
நஞ்சுங் கலந்துவர நானே பொறுக்கேனே."

[அவளைச் சிறிதும் சிந்தியாது கைகளாற் றட்டி விட்டுச் சிதைந்துபோன தவத்தை மீண்டும் பெறுதற்கு ஓர் மலைப்பாறையின் மீதிருந்து மனத்தை நிறுத்தி மீண்டும் கடுந்தவம் செய்ய முயல்கின்ருன். அவளோ நீர்வாருங் கண்களுடனும் ஏங்கிப் பெருமூச்செறியும் உள்ளத்துடனும் எழுந்து நடக்கிருள். அவள்மான் அவளைத் தேடி எதிரே வருகிறது.]

" என்றன் மடமானே, என்னுடைய மெய்த்தோழி!
அன்றுன் முகந்தொட்டு ஆணையிட்ட மெய்யன்பர்
சென்று மறைந்திட்டார் செல்லட்டும்; யாம்பேதை
என்று கொடுமனத்தார் ஏமாற்றிச் சென்றனரோ?

தூங்கும் குயிலினங்காள்! சோடிமடப் புறவினங்காள்!
கோங்கிற் பசுங்கிளிகாள் ! கூவாத குஞ்சினங்காள் !
ஆங்கு நதிக்கரையில், அடியேனைக் கைப்பிடித்து
நீங்கித் துறந்திட்டார் நீரெல்லாம் அறிமினே!

ஆரும் அறியாது அன்றணைந்த போதினிலே
சேரும் எனக்கூறிச் சிரித்திருந்தீர் தாமரைகாள் !
வாரும் இருகண்ணீர் வழிநனைப்ப நான்அழவே
நீரும் இதழ்மூடி நித்திரையு முற்றீரோ.

கீதப் பெடைக்குயிலே கேள், கொழுநன் சிறையணேப்
காதற் சுகமென்று களிக்கின்ருய் பெண்மையினுல் [பிற்
ஈது சுகமென்று எண்ணுதே ஆடவர்கள்
பேதம் புகல்வார்கள், பின்பிரிந்து செல்வார்கள்.''

தேடி நடக்கின்ருள் திசைசுழன்று வீழ்ந்தாளே;
ஆடும் மயில்சிதறி அடிசாய்ந்த தெனக்கூந்தற்
காடும் நிலம்குலேயக் கண்ணீர் வழிநனேப்ப
வாடும் மலர்க்கொடிபோல் மண்மீது புரள்கின்ருள்.

'' காதலித் தேனுமாயின், கற்புடையேனுமாயின்,
வேத மொழிமெய்யாயின், விழிபெறுக அவர்பெற்ருேர்;
நாதன் எனேயணேக; நங்கையெனக் கில்லேயெனில்
ஈதே திருமண்ணில் என்னுடலம் சேர்ந்தழிக.''

[மறுநாள் விடிகிறது]

### வெண்பா

மெல்லென் றலர்சிரிப்ப மீதாடும் வண்டிசைப்பப்
புல்லிற் பனிமுத்துப் பூத்திலங்க—அல்லிலுறு
துன்பம் பறந்தோடச் சோதி முகங்காட்டினுன்
இன்பம் தருங்கதிரோன் இன்று.

### வேறு

கண்கள் திறந்தன, கண்கள் திறந்தன
காசினி யெங்கும் திறந்தனவே;
பெண்கள் பெருமையைப் பேசுவ போற்பல
பேடைக் குயிலினம் கூவினவே.

காலேப் புதுமலர் பூத்தனவே; பூத்த
கண்கொண்டு பாரினேப் பார்த்தனவே;
வாலேச் சிறுமகள் கன்னங்களாமென
வான்மிசைச் செக்கரின் வன்னங்களே.

இன்றோர் புதுமகிழ் வெய்துகிற ததற்(கு)
என்னேடி காரணம் தோழியென
அன்று சிரித்தசெந் தாமரையை யொரு
அண்டை மகிழ்மலர் கேட்டிடுமாம்.

கோத்த பனித்துளி முத்திலங்க, மனம்
கொள்ளை கொடுத்தொரு பூங்கொடியாள்
பூத்ததனது நகைஇலங்க அந்தப்
பொற்பினைப் பார்த்து மயங்குகின்றாள்.

சின்ன இடையினில் நீர்க்குடமும் இதழ்த்
தீரத்திலே ஒரு புன்னகையும்
மின்ன வருகின்ற கன்னியர்கள் பலர்
மீண்ட புதுமையைப் பேசுகின்றார்.

ஓடிவரும் நதிக் கீதத்திலே ஒரு
உன்னத கானந் தொனித்ததுவே,
காடும் திடரும் மலையு மெல்லாம் அன்று
கானக் கடலில் அமிழ்ந்தனவே.

அன்பு மகளினைக் காணவில்லை, என்று
ஆதரத்தால் முனி தேடுகின்றான்;
துன்ப முகத்தினனாகி அயல் நின்ற
தோகையினங்களைக் கூவுகின்றான்.

மன்னன் உலகின் அழகு கண்டான் அவன்
மாதும் உலகின் அழகு கண்டாள்;
அன்னமே என்று கூத்தாடுகின்றானுடன்
அன்பு மகன் முகம் தேடுகின்றான்.

என்று மகன்வரு வானெனப் பேசியே
ஈண்டும் இருளன்றி வேறறியார்
அன்று புனித உதயம் கண்டார்;
அம்புயம் விண்ட அழகு கண்டார்.

எங்கு மகனென ஓடுகின்றுரொரு
எக்களிப்பாற்கரஞ் சூடுகின்றுர்;
அங்கு மகன்தவங் காண்பமெனவவர்
ஆரணியத்தினுக் கோடுகின்றுர்.

[அங்கே ஒரு மலைப்பாறையின் மேல் மகன் தவக் கோலத்துடன் இருப்பதைக் கண்டனர். தாய் தந்தையர் குரல் கேட்டுக் கண்திறந்து பார்த்தான் தநயன். தான் தவஞ்செய்து பெறுவதன்முன் விழிகளைப் பெற்றுக் கொடுத்தது யாரென அறியாது அதிசயித்து மயங்கினுன். மகளைத் தேடிவந்த முனிவன் வாயினுல் அவள் கற்பினுலேயே விழி பெற்றனரென அறிந்தான். நடந்த யாவற்றையும் தாயினுக் குரைத்தான். யாவரும் மஞ்சரியைத்தேடி நடக்கலாயினர்.]

## 8. "யாழின் தந்திகள்"

அவனே இலங்கைக் கோன். எட்டுத்திக்கு மன்னரையும் வென்ற பெருமிதத்தால் அதோ சிம்மாசனத்திருக்கின்ருன்.

அவனே, மன்னர் மன்னன் ;
அவளே, அவன்புயம் அணைந்த காதலி ;
அரியணை மீதே ஆங்குளர் காண்மின்
திக்குகள் பலவும் சென்று சென்று
ஒருதனி வாளால் ஒருதனிப் படையொடு
வணங்கா மன்னரை மலரடி பணிவித்(து)
ஒன்ருர் மகளிர் இன்முகம் கவிழ
அன்ருர் கரங்களைப் பின்ருய்ப் பிணித்து
இனிப்பொர வருவோர் எவரும் இலையென
முரசங் கொட்டி முரசங் கொட்டி
மீண்டது நேற்றே வென்றி சூடி ;
தலையோ, நிமிர்ந்து தான்தனி வேந்தெனச்
செருக்கின் மிக்குச் சேவடி வணங்கும்
மன்னர் பலரை வரிசையில் நோக்கும் ;
கண்ணே, போர்க்கனல் கக்குவ இன்னும்
காலடி வீழ்ந்து கரங்குவித்(து) இறைஞ்சும்
மன்னரைப் பார்க்கும் ஒருகால் ; பின்னர்த்
தன்னரு கிருக்கும் இன்னுயிர்க் காதலி
புன்னகை பூக்கும் இன்முகம் பார்க்கும் ;
மார்பில், சூடிய வாகை வாடில(து) ;
அவனே, அரசர்க் கரசன் ஈழக்
கண்டி மாநகர்க் காவலாளன்
அவளே, அவன்புயம் அணைந்த காதலி ;

கீழே,
புது வென்றி யென்னும் மதுவுண்ட வீரர்
மயிலனை யாரொடு வரிசையில் ஒருபால் ;
முத்துக் குவித்து முன்விழு வோரும்
பொன்குவிப் போரும் புறம்பே ஒருபால் ;
சிங்களர் ஒருபால்,; சோனகர் ஒருபால் ;
இங்ஙனம் இருந்த இறைவன் முன்னே.

### வேறு

காவலர் வீரர் குவையிலே—உயர்
கண்டிக் கரசன் சபையிலே
சேவகன் வந்து வணங்கிறுன்—' ஒரு
சேதிகேள் ' என்றிதைச் சொல்கிறுன்

அஞ்சுவை யாழினில் வல்லனும்—ஒரு
அந்தகன் வந்திருக் கின்றனன்
கெஞ்சுகின்றுனுனைக் காணவே—இது
கேளரசே யென்றியம்புவான்.

" ஈன முகத்தினைக் காணுதல்—இது
எம்மரபுக்கொரு குற்றமே
கானம் பயில்பவன் என்கிறுன்—சரி
காணுவம் " என்றிசைந் தானவன்.

### வேறு

கண்பூத்தார் எவரேனும் இவனுருவம் கண்டாற்
கண்ணினுக்கே பாவமெனப் பூந்திரையுளிட்டுப்
புண்பூத்த முகத்தானைக் காணுகிலார் யாழின்
புரிநரம்பொன் றிசைத்திடவே சிலையுருவம் ஆனுர்.

[அரசன் வெற்றிகளை ஊக்கி வீரரசமமைந்த பாட்டைப் பாடுகிறுன்.]

## பாட்டு

யாவரெனக்கிணை, யாவரெனக்கிணை,
யாவர் எதிர்ப்பவரோ !
சாவர், அவர்க்குயிர் இல்லையெனத்தனி
வாளையிழுத் ததுமே.

வாள்கள் சுழல்வன, வேல்கள் பறப்பன,
வானம் அடைப்பனவால் ;
தோள்கள் பறப்பன, தேர்கள் தெறிப்பன,
சூழுது ரத்த அலை.

குதிரை பறப்பன, புழுதி யுகள்வன,
குற்றுயி ராயினரால்,
உதிர மிறைப்பன, எதிரில் மிதப்பன
ஊனொடு செந்தலையாம்.

முடிகளுருண்டன, மதில்களுடைந்தன,
முத்தொளிர் மாளிகைகள்
அடியொ டதிர்ந்தன ; கொடிகள் முறிந்தன ;
அரச ரொழிந்தனரால்

மேற்கி லொழிந்தனர், தெற்கிலொழிந்தனர்,
மேதினி யுன்னதுவே
பார்க்கு மிடங்களில் எங்கணு முன்கொடி ;
பறைக ளொலித்தனவே.

## வேறு

கொம்பெடுத்து வாயில் வைத்து ஊதுருர்—வெற்றி
கொண்ட மென்று கேட்க எங்கும் ஊதுருர் ;
அம்பெடுத்த வீரராரு முள்ளிரோ—இல்லை
ஆருமில்லை ஆருமில்லை ஊதுருர்.

## II

யாவருனக் கெதிர், யாவருனக்கிணை,
யாரும் ஒழிந்தனரால் ;
மேவி எடுத்திறு மாந்த கழுத்துடன்
வீதி வருகின்ருய்.

வாகை கழுத்தினில் மாலை பலப்பல
வாவு தனிப்பரியில்
வாகு புனைந்திடு தோள்களசைந்துல்
லாச வெறியுடனே.

மாதர் பலப்பலர் ஓடினர் தம்முடை
வாயிலடிக் கதவுக்(கு)
ஓதை யெழப்பரி மீது வருந்திரு
உன்னெழில் கண்டிடவே.

காளை வலித்திணி தோளிலணைந்திடு
காதல் கனிந்திடலால்,
தோளில் அணைந்திலர் ; ஆவி குலைந்தொரு
தூணில் அயர்ந்தனரால்.

கொட்டிய தோள்வலியோடு கொதித்தெழு
கோபமழிந் திருகை
கட்டிய காவலர் உன்பிறகேபலர்
காதலி மாருடனே ;

இரதி யெனத்தகும் உனது மனக்கிளி
இன்னகை பூக்கின்ருள் ;
வருதி ரெனச்சிறை கொண்டவர் தம்முடை
வனிதையர் நாணினரால்.

## வேறு

காதல் வெள்ளம் உள்ளமூறத் தோளிலே
கன்னி மெய்ம் மறந்தயர்ந்து சாய்கிருள்
கீத நாதக் கொம்பெடுத்து ஊதுருர்—வெற்றி
கேட்க வென்றே எங்கும் எங்கும் ஊதுருர்.

அவன் பாட்டைக் கேட்டுச் சபையோர் நிலை.

## வேறு

வாளெடுப்பவர் தோளுயர்த்துநர்
வாய் கடிப்பவரால்.
ஆர்க்குமோபறை ஆர்க்குமோவென
ஆயத்தம் செய்வார் ;

போர்க் களத்தினில் நேர்க்கு நின்றென
நெஞ்சைத் தள்ளுவார் ;
பாயுநற்பரி மீது செல்பவர்
போலத் துள்ளிடுவார்

வாயுவேகம தாகவே பறப்
பார்கள்போல் நெற்றி
வேர்வையே துடைப்பார்கள் சூழ்வரு
வீரர் யாவருமே.

## வேறு

வேந்தெழுந்தனன், வேந்தெழுந்தனன்,
வெற்றிப் போர்வெறியால் ;
அறையுங்கள் பறை, அடியுங்கள் துடி,
உருவுங்கள் வாளை,
ஏறுங்கள் பரி, பாயுங்கள் மதில்,
என்றெழுந்தனனே.

### வேறு

வீர வெறி தாங்காத மன்னவனைக் கண்டான்;
வீரர்கனல் காலுவிழி வெம்மையினைக் கண்டான்;
நேரமிது வந்ததெனத் தந்திதனை மாற்றி [ணன்.
நெருடியிசை தட்டினனந் நெஞ்சமலர்க் கண்

### பாட்டு

### வேறு

புகழே பெரிதென் றெழுவாய் அரசே;
புனலிற் குமிழியிஃ தறியாய் அரசே;
மகளே புவியும் உனதே யென்பாய்
மண்ணும் உனையே சிரியா நிற்கும்.

புழுதிப் பாயல் புரளும் அந்நாள்
பூணும் முடியும் புகழும் என்னும்?
கழுதும் நரியும் கழுகும் பேயும்
கரமும் சிரமும் தமதென் றடையும்.

அசையில், உலகம் அதிரும் இமைகள்
அந்தோ நரியும் சுவைகொள் கிறதே;
அசையில், மன்னர் அசையும் நாவும்
ஆ! ஆ! ஈமொய்க் கிறதே மண்ணில்.

இல்லை இல்லை; யாரும் இல்லை;
வரளும் நாவிற்றுளிநீர் விடுவார்
இல்லை இனிமேல் அறமே யல்லால்;
இனியா ருலகில் இனியா ருளரே.

உயிரைக் கொல்லின் உயிரைக் கொள்ளென
உலகத் திற்கோர் நீதி கொடுத்தாய் !
மயிரத் தனையும் பிசகா திதுவே
மனுவின் நீதி எனவும் சொல்லி,

உயிரொன் றழியின் நீதிப் பெயரால்
உடனே கொலைஞன் உயிரும் கொண்டாய் !
அயரா ததுவே அரசே நிற்கும்*
அழியா நீதி என்றால் என்றால்,

பால்வாய் வழியப் பச்சைச் சிறுவர்
பரியின் கீழே மிதிபட்டனரே.
வேல்வாய் புகவும் தாய்மார் அருகே
வீதி புரண்டார் நீகாண் கிலையோ !

கால்கள் அறுந்தும், கைகள் குறைந்தும்
கண்க ளிழந்தும், புண்கள் பிளந்தும்
வேல்கள் குடைந்தும், தலைகள் சரிந்தும்
வீரர் விழுந்தார் உன்கையாலே.

மாட மிடிந்தும், நாடு கரிந்தும்
மக்களிரத்தம் கக்க விழுந்தும்,
கோடி மடிந்தார் போர்முனை பாராய் !
குமுறும் இரத்தம் உன்கை யாலே.

அரசே கொலைஞன் ; நீயே கொலைஞன் ;
அழுவார் கண்ணீர் சொல்கின்றதுவே ;
உரைசால் நீதிப் படியே கோடி
உயிரைக் கொன்றார் கதியா துரையாய் ?

---

*நிற்கும் - நினக்கும்.

வெற்றி யெனுமோர் வெற்றுச் சொல்லால்
வேந்தேபடு பாவங்கள் புரிந்தாய் !
சற்றே சிந்திப்பாய் மன்னவனே !
தண்டம் நினக்கு நீயே பகராய்.

இசையைக் கேட்ட அரசன் நிலை.

வேறு

கண்ணிறைந்து நீர்வழியத் தலைசரிந்து விட்டான்.
காவலனு னல்லனொரு கொலைஞனெனக் கூறி,
எண்ணி யெண்ணி விம்முகிறான் 'என்செய்தே'னென்று
இளகிமெழு காகிவெறும் குழவியென அழுவான்.

முத்தாயுதிர்ந்தனவே முகத்திருந்து கண்ணீர் ;
முன்னிருந்த படைவீரர் வாள்நழுவ விட்டார் ;
பத்தாவின் தோள்மீது பாவையவள் சரிந்தாள்.
பண்பொழியும் போதெல்லாம் கண்பொழிய லானார்.

[சபையின் அவல நிலையையறிந்து பண்ணை மாற்றிப் பாடுகிறான்].

மங்களம் மங்களமே !
எங்கும் பொங்குக.
கையொடு கையும்,
மெய்யொடு மெய்யும்,
பாவொடு பண்ணும்,
நாவொடு யாழும்,
கூடி ஆடிப்
பாடி ஓடி (மங்களம்).
காதலர் வாழ்க.
காவலன் வாழ்க.

பாவலர் வீரர்
யாவரும் வாழ்க.
நன்றே ஒன்றி
என்றும் ஒன்றே. (மங்களம்).

[அரசன் தானே எழுந்து வந்து திரையைக் கிழித்து யாழ்ப்பாடியை வணங்குகிருன். இசையினுற்றன் உள்ளத்தை மாற்றி மாற்றி அசைத்ததையும் ஈற்றில் அழியாத பெரிய உண்மையை உணர்வித்ததையும் எண்ணி எண்ணி அரசன் மகிழ்ந்து யாழ்ப்பாணத்தையும் முத்துக்குவையையும் யானையையும் பரிசாகக் கொடுக்கிருன்.]

# 9. "விளையாடும் கடல்"

[கரையிலே நிற்பக், காலைக் கழுவிச் செல்லும் கடலைப் பாடியது.]

நுரைத்து நுரைத் தடிக்கும் திரைக்கடலே—என்முன்
நூதனங் காட்டுவதும் போதுமேயடி
விரித்து விசும்புடுத்த கோல மென்னடி?—நீல
விந்தை உடை உடுக்கும் சாலமென்னடி?

நகைத்து நகைத்து என்முன் வந்ததென்னடி!—பின்பு
நாணித் துவண்டு மெலச் செல்வதென்னடி!
திகைத்து ஒருகணத்தில் நிற்ப தென்னடி—பின்பு
தேடி வருவ தென்ன தந்திரமடி.

காலைத் தொடுவதும் ஓடுகின்றதும்—இளங்
கன்னிப் பருவத்தினர் லீலை யோடி
வாலைப் புதுமகளிர் தந்திரமடி—இது
வலிய மசிய வைக்கும் மந்திரமடி.

மார்பத்திலே கிடந்த முத்துமாலை—அதை
மண்ணிற் சிதறுகிற மாய மறிவேன்
பூர்வத்திலே புலவர் பாடினதடி—இது
புத்தம் புதியதொரு ஊடலல்லடி.

போதும் புரியுமிந்த லீலைகளடி—ஒரு
புன்னகை செய்து என்முன் வந்துநில்லடி
காதற் சரசமிடுங் கன்னிக்கடலே!—இங்கு
காண எவருமில்லை நாண மென்னடி.

## 10. "உயிர் கூவும் அங்கே"

அன்னநடை நடந்து நதியூரப்,
பின்னற் கொடியசைய வளியூர,
மின்னும் பனித்துளிகள் இலேயாடச்,
சின்னஞ் சிறுபறவை இசைபாட,
மலர்விரியும் போதென் மனம்விரியும் அங்கே!
குயில்கூவும் போதென் உயிர்கூவும் அங்கே.

வெள்ளிக் குளிர்நிலவு மதிவீசப்,
பள்ளக் கடலருகின் மணல்மீது,
கள்ளக் கிளிமடவாள் அருகாக,
உள்ளக் கடல்திறந்து உரையாடக்,
கடல்பொங்கும் போதென் உடல்பொங்கும் அங்கே!
கரைமோதும் போதென் உரைமோதும் அங்கே.

கொம்பிற் குழைமலரும் ஓர்காவில்,
அம்புற் றளிரணேமேற் றலேசாய்ந்து,
வம்புப் புதுத்தென்றல் சுகமாக,
கம்பன்கவி வந்து நாவூறக்
கரைமிஞ்சிப் பாடும்போ தெதுவுந்தான் வேண்டேன்
உரைமிஞ்சிக் கூவும்போ துலகொன்று காண்பேன்.

# 11. "சாந்தி ஏற்படுமா"

## உரைப் பாட்டு

மேனியெலாம் புண்பூத்து, வீதியெலாம் தன்பாயாய்க்
கானருகே ஓர்ஏழை நோயாகிக் கிடக்கிறான்.
தேனமுதப் பாவழகும் சிந்தைக் கலையழகும்
கம்பன் கவிப்பேச்சும் காம்போதி ராகமுமாய்
இன்பம் நுகர்வதுநான் எப்படியோ? என்தேவா!
கைதூக்கி யவ்வேழை கண்ணீர் துடைத்தாலும்
மெய்பூத்த புண்நீக்கி மினுக்கயான் வல்லேனே.

# 12. "தாயும் குஞ்சும் குண்டுக்குப் பலி"

"கொஞ்சுந் திரவியத் தேனமுதே !—என்றன்
குஞ்சுப் பசுங்கிளிக் கோமளமே !
கஞ்சி வடித்திட விட்டிடடா—அங்கே
காகம் பறக்குது பார்த்திடடா.

பூவிற் குருவியைப் பார்த்திடடா—கண்ணே
போகும் பசுவினைக் கூப்பிடடா.
கூவுங் குயிலினைப் பார்த்திடடா—அங்கே
கோழி வருகுது கூப்பிடடா.

பாலைக் குடித்திடு பாக்கியமே"—என்று
பாலன் மகிழ்ந்திட ஊட்டுகையில்
ஞால முழுதும் நடுங்கியது—அந்த
நாலு திசையும் கலங்கியது.

அண்ட நடுங்கியது,
கொண்டு குலுங்கியது,
விண்டு கலங்கியது,
குண்டு வெடித்ததுவே.

வாய்வழி பால் வடியத்,
தாய்மடி சோர்ந்து விழச்,
சின்னக் கிளியுடனே,
அன்னை சரிந்தனளே.

# 13. மாரியே வா! வா!

கற்பனைத் தேரின் அற்புதப் பரியே!
மாரியே, வா! வா! கருமுகில் கொண்டு
பூவும், குயிலும், பூந்தமிழ்த் தென்றலும்,
தாவும் உளவெறி தந்தன வல்லால்
அமைதிப் பண்ணும், ஆழ்ந்த சிந்தையும்,
சுவைபெற் ருேடிய தூர எண்ணமும்,
சிந்தனை யில்லாச் சுந்தரத் துயிலும்,
தந்தில; அதனுல் வந்திடு மழையே
சாளரம் வழியே தூரவெளி பார்த்து,
நீளக் கற்பனை நெடுவான் பறப்பக்,
கண்ணிமை யாது கல்போல் அமர்ந்து
புண்ணிரு தயத்தைப் போழும் துயரெலாம்
நெருட்டிப்பிடித்த சுருட்டிற் புகைத்துப்
பொருட்டேது மின்றிப் புறந்தனி யிருப்ப
மழையே விழைந்தேன் ஒழியாது பொழிவாய்!
சோ கோ வென நீ ஓயாது கரையும்
வாய்த் தாலாட்டென் தாய்த்தா லாட்டே
போர்த்து மூடிப் போர்வையுட் கொடுகிச்
சேர்த்துச் சேர்த்து உடலுடல் அணைந்து
எண்ண மின்றி இருள்வை கறையில்
கண்ணின் கடைவழி இன்துயில் மொய்ப்ப—
அந்தத் துயிலுக்கு ஆசைகொண் டேனே.
தாலாட் டாயோ வாயால் மருட்டியே.

# 14. தாயின் கண்ணீர்



கூவிக் குலவிக் குருவியினம் விளையாடக்,
 கொம்ப ரெல்லாம்
பூவிற் கிடந்து சிறைவண்டும் இசைபாடப்,
 பொய்கை நீரில்
ஓடிச் சிறுமீன் உலவிவர, அசைந்துவரும்
 பிள்ளைத் தென்றல்
கோடைக் கனலைக் குளிர்செய்ய, இளவேனிற்
 பொழுதில் ஓர்நாள்
செக்கச் சிவந்த செந்தளிரால் மாமரங்கள்
 பந்தலிட்டுப்
பக்கத் தழைக்கும் பூங்காவிற் பைம்புல்லிற்
 றனிமையாகி
மெல்லத் தலைசாய்ந்தேன். அப்பொழுது,

பிஞ்சுத் தளிர்கள் கால்தொடுவ தென்றிருந்தேன்;
பின்னே பார்த்தேன் ;
கஞ்ச மலர்முகமும் கண்ணீரு மாகியொரு
கன்னி நின்ருள் ;
காந்தள் விரலாற் கால் தொட்டாள் ; "கண்மணியே
எழு"வென் ருளே
சோர்ந்து கிடந்தேன் எழுந்திட்டேன் ; "தோகாய்நீ
யாரோ" என்றேன்.
"புத்திரனே"யென் றிதழ் எடுத்தாள் ; புகலாது
விக்கி நின்ருள் ;
முத்தாய் உடைந்து முகம் நனைக்கும் கண்ணீரும்
உயிர்த் தெழுந்த
விம்முதலும் பேசினவே.

காலிற் சிலம்பும், கொடியிடையில் மேகலையும்,
வள்ளைக் காதிற்
காலித் திலங்கும் குண்டலமும், கைவளையும்
கருமை சீய்க்கும்
சிந்தா மணியும் திறங்கண்டேன் ; சேவடியில்
வீழ்ந் திட்டேனே.
"எந்தாய் தமிழே, என்றேயோ" குழறினேன்
ஏக்கத் தாலே.
"அன்ருய் அழுது வெதும்பாதீர் ; அடியேன்நீர்
ஈன்ற பிள்ளை
சொன்ருற் குறைகள் துடையேனே
சொல்லும்" என்றேன்.
கன்னி கலங்கினுள் ; கட்டுரைத்தாள்.

"வெள்ளம் புரண்டு வருகுதப்பா! வீதியெலாம்
வேகத் தோடே
தெள்ளு தமிழ்ஏட்டுச் செல்வமெலாம் சிதைத்துக்
குலைத்து வாரி,
பச்சைத் தமிழ்த்தேன் பரிமளித்த முன்றில்களை
மூழ்க மூடி,
மெச்சிப் புலவர் எனைவளர்த்த சங்கமெலாம்
மேல்கீ ழாக்கி,
முன்னைப் பழையோர் முத்தாடிச் சேர்த்தகலை
சிதறிப் போகத்
தென்னன் மதுரைத் தெருவெல்லாம் மதிலுடைத்து
வருகுதப்பா
அங்கேபார்! மகனே!
ஆங்கிலப்பேர் வெள்ளமொன்று ஐயையோ
வருகுதே பார்!
தாங்கி வளர்த்த தமிழ்மன்னர் மனைக்கெல்லாம்
ஓடிப் போனேன்.
மண்ணில் முடிசாய்ந்(து) உறங்குகிறார் மன்னரெலாம்
மனையும் சாய
சங்கப் பலகைக் கோடினேன்சூழ் தண்ணீருட்
தாழக் கண்டேன்;
'தங்க இடமுண்டோ'? என்றிந்தத் தமிழ் நாட்டுத்
தெருக்க ளெல்லாம்
கூவிக் குழறிக் குரலடைத்தேன்; கூப்பிடுவார்
எவரும் இல்லை;
வாவிக் கரையும், மலர்ப்பொழிலும், வனநடுவும்
வைகி வைகித்
தன்னந் தனியே தளர்கின்றேன் தமிழ்மகனே!
தாய் நானென்று
விக்கிப் பொருமினாள்" என்றன் அன்னை.

## 15. "வாழ்வாம் மலையில் ஏறும் வீரன்"

மலையோ நெடிது வழியோ தொலைவென்
றஞ்சாதே வீரா !
பலவாய் வருதே பலமோ இலையென்
றேயாதே வீரா !
'தலைமேல் வரட்டும், தனியே சுமப்பன்' என்
றெழுவாய் வீரா !

எதிரே புயலும் இடியும் மழையும்
தாக்கித் தள்ளட்டும் ;
புதிதாய்ப் பலபல குழியும் புழையும்
காலைச் சீய்க்கட்டும் ;
அதிரா மனமும், அசையா நிலையும்
கொள்வாய் நீ வீரா !

பகையாய் இருளும் பசியும் வரட்டும்
நெஞ்சம் சோராதே !
தொகையாய் வரட்டும் துயராய் வரட்டும்
கால்பின் வைக்காதே.
திகையா தெழுவாய் திடமாய் உரமாய்ப்
போபோபோ வீரா !

சறுகிச் சறுகித் தளரின் விழுகின்
நெஞ்சம் சோராதே.
இறுகித் தொடரும் துயரைச் சிரிப்பாய்
ஏங்காதே வீரா !
உறுதிப் பிடியுடன் உலகத்தனிமலை
உச்சிக் கேறிடுவாய்.

## 16. "எழுந்திடுவாய் மனமே"

இயற்கையின் வீணைகள் கேட்குது ! கேட்குது !
எழுந்திடு வாயினி என்மனமே !
குயிற்குரல் பாடுது ; கூவுது புள்ளினம் ;
குதித்தெழு வாயினி என்மனமே !

பூக்களும் பூத்தன பூவுல கெங்கணும் ;
புதுமலர் வேய்ந்தனவே மரங்கள் ;
பாக்களும் ஊறுது ! பாடிடு ! பாடிடு !
பரவச மடைவாய் என்மனமே !

போனவுன் நேற்றைய புண்படும் இன்னலைப்
புகுத்தியின்(று) ஏங்குவதேன் மனமே !
ஆனவுன் நாளைய ஆகுலம் எண்ணியின்(று)
அஞ்சுவதேன் விடு என்மனமே !

பளிங்கெனப் பாயுது பார்புதுத் தீம்புனல் ;
பலபல பேடைகள் நீந்துதல் பார்
களங்கமெல் லாம்விடு பாங்கவை யோடுடன்
களிப்புடன் நீந்திடு போ மனமே !

பொன்னொடு தங்கமும் என்னது என்றொரு
பொய்க் கனவாற் றுயர் கொள்ளாதே ;
மின்னுமிக் காலையின் பொன்னிறக் காட்சியை
மிளிருமுன் கண்குடித் தாடிடுவாய் !

பூந்தமிழ்த் தென்றலும் புன்னகை மலர்களைப்
போயொரு முத்தமிட் டோடுதல்பார் !
நீந்திடு அதன்மிசை ; நின்துயர் போயின ;
நித்திரைவிட் டெழுவாய் மனமே !

அங்கொரு பூவிலும், இங்கொரு பூவிலும்,
ஆடிடும், பாடிடும் வண்டினைப்பார்!
எங்கணும் கேள்! இயற்காமணக் கன்னிகை
ஏந்திய வீணையை மீட்டுகிறாள்.

தூக்கமும் துன்பமும் தொல்லையும் போயின;
துள்ளிடு சோர்ந்துறங்கேல் மனமே!
ஏக்கமும் இன்னலும் போயின போயின;
எழு எழு சோர்ந்துறங்கேல் மனமே.

## 17. "பாட்டே எனைமறந்தாயோ"

பாட்டே எனைமறந்தாயோ !
　　பராமுகமாய்த்,
தீட்டாமல் உன்முகச் சித்திரம்
　　என்மனப் பூந்திரையில்
கூட்டாமல் உள்ளும் கறுத்தேன் ;
　　இனியிது கொண்டிருக்க
மாட்டேன் ; என்நெஞ்சில் வருவாய்
　　உயிர்க்கு மடமயிலே !

ஆற்றங் கரையினில் உன்முகங்
　　கண்டதுண் டாங்குகடற்
காற்றில் நினது மொழிகேட்ட
　　துண்டுயிர்க் கம்பனுடை
கூற்றில் நினதுருக் கோத்ததுண்டே
　　கவிக் கோதையரே
ஈற்றிற் சிலநாள் எனைவிடுத்
　　தெங்கோ ஒளித்ததுவே ?

நீலக் கடலருகே மணற்
　　குன்றினில் நின்று நின்று
கோலத் திரையின் எழில்பார்த்
　　திருக்கக் கொடியிடைநீ
சேலைத் தலைப்பும் ஒருகை
　　அலைப்பச் சிறுசிரிப்பும்
மேலைக் கடைவாய் ஒழுக
　　வந்தீர் ! என்மெல்லியலே !

பூவால் உலகம் பொலியுமவ்
      வேனிற் பொழுதுகுயிற்
கூவால் எனது புறக்கதவே
      நின்று கூப்பிடுவீர் ;
கோவா இயற்கைக் குரல்யாழ்
      ஒலித்துக் குளக்கரைக்கே
வாவா என அழைப்பீர்
      மறந்தீரோ வனிதையரே.

உள்ளம் நரைத்த துண்டோ ? அல(து)
      ஊறும் கவிதை மடை
வெள்ளம் வரண்டு மரத்ததுண்டோ ?
      வரும் வெவ்வினையாம்
கள்ளம் புகுந்துளம் மூடிக்
      கவிந்து கறுத்ததுண்டோ ?
பள்ளந் தனில்விழுந் தேனெனைப்
      பாராய் கவிக்குயிலே !

## 18. "கடலும் புயலும்"

மலைகள் புரண்டு புரண்டு விழுந்ததுபோல்,
அலைகள் திரண்டு புரண்டு மடிந்தனவே ;

வலைஞர் ஒதுங்க படகுகலங்க
நிலைகள் தளர்ந்து குருகு பதுங்கக்
கடல் - புரண்டதுவே.

முகில்கள் இருண்டு திரண்டு வெடிக்குதுவே ;
திகிலி லதிர்ந்திரு திசைகள் பதைக்குதுவே ;

அகில நடுங்க அவனி குலுங்கப்
பகலு மிருண்டு பறவை யொதுங்க
இடி - இடிக்குதுவே

திரைகள் சுழன்று சுழன்று கிளம்பினவே ;
நிரையில் மரங்கள் மரங்கள் வளைந்தனவே ;

நுரைகள் பிதிர்ந்து கரைகளுடைந்து
தரையுமதிர்ந்து இரைதல் எழுந்து
புயல் - எழுந்ததுவே.

# 19. "வைகறையின் சாந்தி"

பூமி யானது போர்வை நீக்கி வெளித்தது ;
மேவு கீழ்த் திசைக் கன்னமெல்ல ஒளிர்ந்தது ;
சோதி யானபொன் வானச்சீலேயிற் ருேன்றுதே
காத தூர மரங்களும் கறுப் பாகவே
ஆவிதென்னமென் தென்றலும் அசையாமலே
ஓவியம் வரைந்தென்ன யாவும் உறங்குதே ;
மந்த மோன மயக்கில் நீர்நிலே தூங்குதோ !
சிந்தி யாது மரங்கள் யோக தியானமே
கொண்டவோ ? இதிற் கூடு சாந்தி அமுதினே
உண்டதும் குளிர்ந் துள்ளு முள்ளு மினிக்குதே !
உள்ளமே மெல நிற்குதே! உயிர் உள்ளிலே
மெள்ள வந்த தோர் சாந்த வின்ப விளேவினேச்
சொல்லவோ முடியாததே புவி தூங்குருள்
மெல்ல மோனமதாகி மந்த ஒளியிலே.

# 20. "நுவரவீவாக் குளக்கட்டில் நின்றபோது"

[அனுரத புரியில், திரு இருதயக் கல்லூரி மாணவர்களோடு உலாப்பிரயாணம் செய்து வருகையில், நுவர வீவாக் குளக்கட்டின் மீது ஆசிரியர் நிற்க நேர்ந்தது. பொன்னொளி பாயும் அம்மாலை வேளையில் எதிரே தோன்றிய அனுரத புரியின் விகாரைகளின் மூன்று முடிகளும் சிந்தனைப் பொறியைத் தூண்டின. நெஞ்சு பெருமித மடைந்தது. உணர்ச்சி பாக்களாயின.]

உயர்ந்தோங்கு வீர்முடிகாள்! இன்னும் இன்னும்
உலகத்தே புகழ்தெரிய நிமிர்ந்து நிற்பீர்!
அயர்ந்திருந்த என்னடிமை நெஞ்சி னுள்ளே
அழியாத வீரமூட்டும் முடிகாள் வாழ்வீர்!

எத்தனைபோர் கண்டீரோ! இலங்கை மண்ணில்;
எத்தனைபேர் முடிசாயக் கண்டீர் கொல்லோ!
எத்தனைபேர் சமயநெறி உடைக்க வந்து
ஈதேமண் ணோடுபொடி யாதல் கண்டீர்.

நீர்கேட்ட பறையொலி எத்தனையோ! நின்று
நீர்சிரித்த பகைஞரும் எத்தனைபேர் கொல்லோ!
நீர்கேட்ட ஞானமொழி நித்தி லங்கள்
எத்தனையோ எத்தனையோ போதிஞானம்.

செங்கதிரோன் பொன்னெழுதுகின்றான் நும்மேல்;
சிரிக்கின்ற பொன்முடிகாள் சொல்வீர் நீவிர்
இங்கிதுபோல் இரவியுடன் விளையாட் டெய்தி
எத்தனை அந்திப்பொழுதில் இனித் திருந்தீர்.

நடக்கின்ற இம்மண்ணிற் கிடப்ப தெந்த
நவமணிப் பொன் முடித்தலையோ ? சிதறிஇங்கே
கிடக்கின்ற இச்சிலையில் வீற்றிருந்து
கெஞ்சிய மெய்க்காதலர்கள் யாரோ யாரோ ?

மிதிக்கின்ற இம்மண்ணில் நான மாட
மெல்லியலார்க் கமைந்தனவோ குளங்கள் ; மந்தி
குதிக்கின்ற கொம்பரெலாம் கான வீணை
குளிர்ந்துவரு மாடிகளோ அரண்களோகொல்.

எந்தமணித் திருக்கோயிற் றெய்வப் பீடம்
என்கால்கள் மிதிப்பனவோ அன்றி எந்தப்
பந்தமிலான் புத்தனடி யார்கள் சங்கப்
பாஞ்சாலை நிற்பேனே பாவஞ் சேர.

கால்கூசும் நிற்பதற்கே ; கண்கள் மல்கும் ;
கைகூம்பிச் சிரமேறும்; நெஞ்சு நையும்;
நீல்வானத் தம்பரத்தே நிமிர்ந்து நில்லீர்
நீண்முடிகாள் நெஞ்சத்தே பெருமை பொங்க.

காலமெனுங் கண்ணிலியாற் கவினழிந்தும்
காற்றுமழை போர்க்கெழுந்தோர் தமக்கஞ்சாது
ஞால மெலாம் புகழ்சிதறும் தீபம் போல
நமதுகதை சொல்கின்றீர் நிமிர்ந்து நில்லீர்.

கல்லெல்லாம் கதைசொல்லும்; புனித மண்ணிற்
புல்லெல்லாம் புளகித்து வீரம் பேசும்;
சொல்லில்லாக் காவியங்கள் சொல்கின் றீரே !
சுடர்முடிகாள் பழம்பெருமை கூவிச் சொல்லீர் !

மனிதமதிக் கெட்டாத காலத்தேநாம்
மனிதரென வாழ்ந்தகதை கூவிச் சொல்லீர் !
புனித அருட் புத்தனடியார்கள் பாதப்
பொற்றூளி வந்தகதை விரித்துச் சொல்லீர்.

நாடெல்லாம் நென்மலேகள் பொலிந்த வாறும்,
நகரெல்லாம் சாதுவொலி எழுந்த வாறும்,
காடெல்லர்ம் குளங்களாயும் குகைக ளெல்லாம்
கலேக்கோயி லானதுமக் கதைகள் சொல்லீர்.

சித்திரங்களறியோம் நாம் என்பவர்க்குச்
சிதைந்தசிறு கற்களேநீர் சிற்பஞ் சொல்லீர்!
புத்தியிலேம் என்பவர்க்கோ உச்சி மேலே
பொன்முடிகாள் விடைசொல்லீர் மாசுதீர.

சமயநூல் கற்பிக்க வந்தோர் தம்மைச்
சரிந்தசிறு செங்கற்காள் ! கற்பிப்பீரே
இமயமென எழுந்தெனது அடிமை மாற்றும்
எழில்முடிகாள் மனமென்ன வளரு வீரே.

தந்தையரோ பெரியர்களாழ் உன்னேப் பெற்ற
தாய்நாடோ தவமண்ணும் என்று எந்தன்
சிந்தையிலே வீரவனல் மூட்டு கின்ற
சிகரங்காள் அடிமைமனம் தீர்த்தீர் வாழீர் !

## 21. "மார்கழி மாதத்து மாலை வேளையில் எழுதப்பட்டது"

வானமோ தெளிவாகிய மார்கழி ;
வையமோதளிர் வேய்கிற மார்கழி ;
பானுவோபொன் உருக்கின்ற மாலையில்,
பச்சை மெல்லறுகின்மிசை சாய்ந்தனேன்.

நீலமான வெளியின் தெளிவிலே,
நிர்மலத்தின் சுகம்வந்து சொக்கவும்,
ஞாலமாது குளித்தெழுந் தாளென
நாலு பக்கமும் பைந்தழை தோன்றவும்,

வந்து வந்துமெல் வாடைதொட் டோடவும்,
வானத்தேபல பட்சிகள் நீந்தவும்,
அந்தி பொன்கதிர் அள்ளி விசிறவும்,
ஆ! என் உள்ளம் அடைந்ததென் சொல்லுவேன்.

சின்னச் சின்னக் குருவிகள் காற்றிலே,
சிந்தையின்பந் திறந்து விடுவபோல்,
சொன்ன பாடல்கள் ; சுற்றிப் பறந்தன ;
சோடியாய் அழகள்ளிக் குடித்தன.

பச்சையாகக் குழைத்த மென்கொம்பரும்
பாடி யாடின வாடையி லாமெனில்,
இச்சைப் பேய்பிடித் தாடிடும் மாந்தரே !
இன்னுமேன்கண் திறந்திதைப் பார்க்கிலீர் !

'அண்டம் யாவும் அளந்து கண்டோமெ'ன்றீர்
'அணுவினூடு துளைத்து விட்டோ'மென்றீர்
'எண்டிசைக்கும் ஒரு கணப் போதிலே,
ஏறியே பறப்போமெ'ன்று கூவினீர்.

பட்சிகாணுமிவ் வின்பத்தைக் காண்கிலாப்
பாவி மானுட அந்தக சாதியே!
கட்சி கட்டிக் கொலைசெயும் மாந்தரே,
கண்டிலீரிவ் வியற்கையின் பாதையே.

# 22. "மணவாளன் வந்தகோலம்"



உலகிலே விளங்க முடியாத ஒரு மர்மம் இருக்கிறது. பஞ்சணை மெத்தையிலே பக்குவ மறிந்து விஞ்ஞானம் கூறும் சமத்துவ உணவை உண்டு, வெயில் மழை காற்றுப்படாது இனிய வாழ்வு நடாத்துவோரைத்தான் பெரிய பெரிய வைத்தியர்கள் அணுக வேண்டியிருக்கிறது. அவர்களுக்குத்தான் 'இன்சுலினும்' 'பென்சிலினும்'.

ஆனால், கடும்வெயிலிலே, பழந்தண்ணீரை மாத்திரம் குடித்து விட்டுக் கல்லுடைக்கிறானே ஏழைத் தொழிலாளி; சேரியிலே ஒழுகும் கொட்டிலிலே, ஒழுக்கிற்கேற்பக் கால்களையும் மடக்கிக் கொண்டு கிடக்கின்றார்களே சேரிப்பாலகர்; விஞ்ஞானங் கொண்டு பார்த்தால் ஏழை செய்யும் தொழிலுக்குப் பழந்தண்ணீரில் ஏற்ற 'கலறி'கள் (Calories) உண்டா; ஆடையற்ற குழந்தைகள் அந்தக் குளிரிலே சுவாதநோய் காணாது பிழைப்ப தெப்படி?

கடவுள் எங்கே; மணவாளனாகிய கடவுளைக் காணத் தன்னை அலங்கரித்து நிற்கும் உயிராகிய காதலியைக் கேளுங்கள்.

புலர்ந்து புலராப் பொழுதெழுந்து நீராடி
மலர்ந்து மணமிதக்கும் போதும்—கலந்து
உள்ள மலரோ டுவகை வெறிப் பாவிசைத்துக்
கள்வனுக்கோ கோத்தே ஞேர்மாலை ;
மாலை கருகியதே மணவாளன் வந்திலனே ;
சாலை அருகிருந்தேன் சாளரத்தே.

வேகும் வெயில்வெதுப்ப வியர்வை பெருக்கெடுப்ப
தாகம் வரட்டவுயிர் தாங்காது—சாகுமள(வு)
ஏழை ஒருவன் எருதிழுக்க மாட்டாமல்
மாளு கின்ருனே மணலில் மாய்ந்து ;
மாளுகின்ற ஏழை மனந்தளிர்க்க வண்டியின்கீழ்த்
தோள்கொடுக்கக் கண்டேனென் தோன்றல்.

கண்ணுடி முன்னின்று கடிகையொரு மூன்ருகக்
கண்ணுளனுக் கென்றன் கையாலே—பெண்ணுன்
அழித்தழித்து மென்மேல் அழகழகாய்த் தோன்ற
விழிக்கெழுதி னேன் அஞ்சனம்.
அஞ்சனமோ தேய்ந்ததுவே அன்பன்வரக் காணேனே
நெஞ்சுகுலைந் தழுது நெட்டுயிர்த்தேன்.

அந்தி மயங்கி அழகழியும் வேளையிலே,
சிந்தை தளர்ந்துநான் தேம்புகையில்—வந்தான்
கந்தையுடையும் கரமுழுதுஞ் சேருக
வந்தானென் சாளரத்தின் வாயில்.
வாயில் குறுகியஎன் வள்ளலடி வீழ்ந்தேனே
தோயும்படி அணைத்துச் சொன்னுனே.

கண்ணீர் துடைத்துக் கருணைமழை பெய்து [ளன்
'பெண்ணே' என அணைத்துப் பேசுகிருன்—கண்ணு
கோடை வெயில் வெதுப்பக் கொதிக்கின்ற மக்களுக்கு

நீடு நிழலாக நின்றேனே.
நின்றுகளை தீர்க்கேனேல் நேரிழாய் அன்னவர்க்குப்
பொன்ருப் புகலாரோ சொல்.

தாயின்றிக் குஞ்சினங்கள் தவிக்கின்ருர் சேரியிலே;
பாயின்றி மக்கள் படுக்கின்ருர் ;—வாயின்றி *
நீதி சொலமாட்டாத நெஞ்சினர்க்கு யானன்றி
ஏதுரைப்பார் அங்கே எவர்?
எவரு மறியாதே ஏழைகளின் பின்னின்று
அவர்க்குதவி யாவேன் அறி.

## 23. "மனிதனின் பெருமையும் பிராணிகளின் பதிலும்"

"வானம் பறப்பேன் ; ஞானம் படைத்தேன் ;
வர்ணக் குருவிகள் போல மிதப்பேன் ;
கானம் இசைப்பேன் ; காசினி யெல்லாம்
கண்ணிமை செய்யுமுன் ஓடி வருவேன் ;"

என்று பெருமையடித்தான் மனிதன். சின்னக் குருவி பதில் சொன்னது.

"வானம் பறப்பாய் ; ஆனலெதற்கு?
வஞ்சனை சூதுகள் செய்வதற்கே.
கான மிசைப்பாய்! ஆனலெதற்குக்
கள்ளங்கள் மூடி மறைப்பதற்கே.

---

* வாயின்றி நீதி சொலமாட்டாத-சிறந்த வாய்வன்மையும், வக்கீலும் இன்மையால் உண்மையையே சொல்லமுடியாத.

பிஞ்சுக் குழவியை மாய்ப்பதற்கும், வெறும்
பேதமை மாதரைத் தீர்ப்பதற்கும்,
கொஞ்சமும் நெஞ்சில் இரக்க மில்லாமலே
குண்டினைக் கொண்டு பறந்திடுவாய்.

உல்லாச மாகஇவ் வானவெளியினில்
உண்மையில் நீயும் பறப்பதுண்டோ?
சல்லாப மாகச் சிறகடித்தே நாங்கள்
சாதியாரோடு பறந்திடுவோம்.

மனிதன் பின்னரும் பெருமையாகச் சொன்னான்:

ஆழக் கடலினில் நான்வசிப்பேன்; மீனும்
அங்கறி யாவகை கீழ்க்கிடப்பேன்;
மீளக் கடலுக்கு மேல்வருவேன்; மீண்டும்
மெல்லவருஞ் செய்தி கேட்டிடுவேன்.

அதற்குச் சிறுமீன் பதில் சொன்னது:

மக்கள் உணவு கவிழ்ப்பதற்கும், அங்கு
மாயப் பொறிக்குண்டு தாழ்ப்பதற்கும்,
இக்கரை தன்னிற் பசித்திருப் போர்களை
ஏங்கி இடிவிழச் செய்வதற்கும்,

வஞ்ச மொன்றில்லாத குஞ்சுக் குழவிகள்
வங்கத்திலேறி வரும்பொழுது,
கொஞ்சமும் நெஞ்சில் இரக்கமில்லாமலே
கொந்தளிக்குங் கடற் கீழ்க்கவிழ்ப்பாய்.

எக்கணமும் பயத்தால் மிரள்வாய் சற்றும்
ஏக்கமில்லாமல் இருந்த துண்டோ?
துக்க மில்லாமற் கடலிற் றிரியுஞ்
சுதந்திர மேதும் உனக்கு முண்டோ?

## 24. "கடவுளின் பதில்"

பூக்கள் கொண்டுநின் பொன்னடி போற்றியே
பூமி தாழ்ந்துநின் தண்முகத் தாமரை
நோக்கியே யிருகண்களின் நீர்வர
நொந்த என்மனம் ஓர்வரம் கேட்குமே.

அழுகையாற் றுடிக்கின்றவென் வாயிதழ்
அப்பனே உலகோர் படும் துன்பங்கள்
மெழுகி னுயவென் உள்ளம் உருக்குதே
வேண்டினேனிதை நீக்கிடும் என்றனை.

தெருவிலேபுண் புழுத்திடு மேனியான்
தேடுவாரில்லை ஓரம் கிடக்கிறான்.
உருகுதே எனது(உ)ள்ளம் அவன்குரல்
'ஊ ஊ' என்று கதறிடும் போதினில்.

பஞ்சத்தாற் குழியான வயிற்றுடன்
பாலர் சின்னக் கரங்களை நீட்டியே.
கஞ்சிக் காகக் கதறுகின்றார் என்றன்
கண்ணின் நீர்நிறை வாகி வழியுதே.

நோயிலே படுவார் துயர் எத்தனை !
நொந்த கூக்குரல் எத்தனை ! எத்தனை !
பாயிலே துடிக்குங்குரல் எத்தனை !
பாவியேன் இதைப்பார்க்கவும் நேர்ந்ததே.

'எந்தையே உமைவேண்டுவ(து) ஒன்றுள(து)
ஈது நல்கும்' எனஅடி வீழ்ந்தனேன் ;
அந்த வேளையில் அண்ணல் முகத்திலே
அங்கு தோன்றிய தோரிளம் புன்னகை.

வேனிற் காலப் புதுத்தளிர் வேய்ந்திட
வீழுகின்ற சருகினைக் காணுதி.
கானில் முல்லை மலர்வதன் முன்னரே
காய்ந்து வீழும் மலர்க்குவை எத்தனை !

தந்த நோயும் இடும்பையும் இன்னலும்
தண்ணருள் வெள்ளத் தாலெனக் காணுதி !
வெந்த பொன்னைச் சுடுவதெல்லாமது
மேலும் மேலும் ஒளிர்ந்திட வல்லவோ ?

சாவு மென்னருளால் வந்த இன்பமே !
தாங்கலாது தவிக்கின்ற மக்களை
நோவு நீக்கிப் புதுக்கிச் செதுக்கியே
நுண்மை செய்யுமென் தண்ணருள் காணுதி.

ஆதலால் மகனேவருந் தாதிரு ;
அன்னயாவு மென்னின்னருள் ஆகுமால் ;
காதலால் என்றன் மக்களைக் காத்திடும்
கருணைவெள்ளக் கடலினைக் காண்கிலாய்.

## Madras Hindu Says.
## Sanday, February 6, 1955.

# ANANDA TEN

By K. SACHIDANANDAN (Published by the Author, Mavittapuram, Tellippalai, Jaffna, Rs. (1)

This is a collection of poems by the author on varied subjects at various occasions. Here we find new ideas in old garb and the poet shows plenty of imagination, sense of beauty, warmth of feeling and sympathy towards his surroundings. Four pieces are on gods and goddesses. In a conversation between man and animals and birds, the latter ridicule man's ill-nature and heartlessness. The author shows his great love for Tamil and Tamil poetry in many of his poems. A poem is written in Kavya style running to several stanzas and the story though incomplete is full of emotion and imagination. The song entitled "Yazhin Tanthigal" is a poet's eulogy on a king of Ceylon. "Thayum Kunjum Gundukku Bali" is a pathetic poem on the horrors of war. Some poems are lyrical in composition and reveal the sweet sympathetic heart of the singer. The language is very simple and straight. It is hoped that these poems will be enjoyed by readers who love to see ancient Tamil traditions maintained in modern poetry.

Rs. 1-CO